தனிப்பிரதி 1 அணு வருட சந்தா ரூ. 5. **REGD. NO. M. 4455.**

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
**C. N. அண்ணாதுரை M. A.,**

"தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 ‖ காஞ்சிபுரம் 17—5—42 சித்திரபானு—வைகாசி 4உ ஞாயிறு ‖ இதழ் 11

## செங்கல்பட்டு ஜில்லா ஜஸ்டிஸ் மகாநாட்டில் திராவிட நாட்டுப் படத்திறப்பு விழா வாற்றிய போனூர்,

# தோழர், K. சுப்ரமண்யம் சொற்பொழிவு.

பெரியார் அவர்களே! தலைவர் அவர்களே! தோழர்களே! வடஆற்காடு வட்டாரத்தைச்சார்ந்த எனக்கு செங்கற்பட்டு மாவட்ட நீதிக்கட்சிமாநாட்டில் திராவிட நாட்டு படத்திறப்புவிழா ஆற்றும்பணியை அளித்தமைக்கு என் உள்ளன்பு கலந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். பன்னெடுங்காலத்திற்கு முன்னால் முத்தமிழ் வளர்த்து மும்முரசுகொட்டி வீர வாழ்வு வாழ்ந்துவந்த திராவிடரின் பெருமைகளைப் பற்றி பண்டை இலக்கியங்கள் எடுத்துரைக்கும். இலக்கிய வல்லுணர் எமது தளபதி பேராசிரியர் சோமசுந்திர பாரதியார் அவர்கள் இதற்கு சான்று பல கூறுவார். அன்று நாடு இருந்ததை ஏடு எடுத்துரைக்கும் இன்று நாடு உள்ளதை நமது தலைவர் பெரியார் அவர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே எடுத்துரைத்து வருகின்றார். முற்காலச்சிறப்பு சிதைந்து தற்காலம் தமிழர்கள் தாசர்கூட்டமாகத் தத்தளித்து கொண்டிருப்பதைக்கண்டு, கவலைகொண்டு, நோய்தீர மருந்து எது என்பதுபற்றி ஆர அமர யோசித்து பலபல வழிகளை ஆராய்ந்து பார்த்து இறுதியில் இழந்த இன்பத்தை தமிழர் மீண்டும் பெறவேண்டுமானால், வீழ்ந்த தமிழரசை மறுபடியும் எழச்செய்ய வேண்டுமானால், புலியென வாழ்ந்த தமிழர் முயலென இருக்கும் நிலை மாறவேண்டுமானால், மேல் உலகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் இடையே நின்று தரகு செய்து வாழ்ந்துவரும் தர்ப்பைக் கூட்டத்தின் தர்பார் அடங்கவேண்டுமானால், சுயஆட்சி, சுகவாழ்வு சமுத்துவம், நீதி, சமதர்மம், சமஉரிமை, ஆகிய மணமுள்ள மலர்கள் தமிழர் பூந்தோட்டத்தில் காட்சிதரவேண்டுமானால், அரசியல் அடிமைத்தனமும், சமுதாய இழிவும் பொருளாதார பேதமும் நம்மைவிட்டு ஒழிய வேண்டுமானால், வாழ்க்கை ஒரு சுமை என்று வாடும் நிலைமை மாறி வாழ்க்கை இன்ப உரிமை என்ற எண்ணம், எழவேண்டுமானால், திராவிட நாட்டைத் தனி நாடாக்கித் தன்னரசுடன் இருக்கச்செய்வதைத்தவிற வேறு மார்க்கம் இல்லை என்ற தீர்மானத்திற்கு நமது கட்சி வந்திருக்கிறது. அந்த நிலைமையை, நமது லட்சியத்தை ஒருவாறு எடுத்துக்காட்டுவதுதான் இந்த திராவிட நாட்டுப் படம்.

இந்திய உப கண்டத்தில் இன்று பிணைக்கப்பட்டுள்ள இந்த நமது நாட்டிற்கு, ஆங்கிலர் அரசாள்வோராகவும், ஆரியர் ஆட்டிப்படைப்பவராகவும், வடநாட்டவர் வியாபாரத்துறையில் முதலாளிகளாகவும் இருக்கும் கோரமான நிலைமையைக் காண்கிறோம்.

விந்தியம் வடக்கே குமரி தெற்கே முப்புறமும் கடல், எப்புறமும் இயற்கை எழில் கொண்டது திராவிட நாடு, இந்நாட்டு கடலோரங்கள் உலக வியாபாரக் கோட்டங்களாகவும் கடலை அடுத்த இடங்கள் அஞ்சா நெஞ்சர்கள் தங்கி இருந்த அரண்களாயும் பழமுதிர் சோலைகளும் பாமணம் கமழும் நகரங்களும் நஞ்சையும் புஞ்சையும் தங்கச்சுரங்கமும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் கொண்ட கண் கவர் காட்சியாக தமிழ்நாடு இருந்துவந்தது. வீரம், காதல், கவிதை, எனும் விளையாட்டுகளை கண்டோரும் கேட்டோரும் களிக்கும் வண்ணம் நடத்திக்காட்டி நாவலர்ந் தீவில் நம்மவர் வாழ்ந்து வந்தனர். நாம் அனுப்பிய பட்டாடை ரோம்நாட்டு ரமணிகளுக்கு ஆடையாகஇருந்தது. மக்களின் வாழ்க்கைக்காக உழைக்க வேண்டும் என்ற மனோவிரதம் பூண்ட மன்னர்கள், மதிபோன்ற நிதி மாநிலத்தில் இல்லை என்பதனை உணர்ந்த மந்திரிகள், மரண மண்டலம் செல்லவேண்டுமென்றாலும், மானம் காக்கும் போருக்காக மன உறுதிபடைத்த மாவீரர்கள், இயற்கை வளங்களை செயற்கை முறையுடன் சேர்த்து தொழில் திறமையை தரணிக்கு தெரிவித்த வணிகர்கள், மலையிலும் மலர்காணும்படி திறத்துடன் உழைத்த வேளாளன் குடியினர், பாயும் புலியினை வேலினால் கொன்று வீரச்சிரிப்பு சிரித்த வீரர்கள், தாமரைபூத்த குளத்தினிலே முகத்தாமரைதோன்றிட மூழ்கிடும் தையலர்கள்—இவை பண்டை தமிழகத்தின் பரிமளக்காட்சிகள். சிந்துநதி தீரத்தில் கங்கைக் கரையோரததில், இல்லாததை எண்ணி ஏங்கியும், இருப்பதை கிடைக்கவில்லையே என்று மனம் வீங்கியும், அறிவு தூங்கியும் ஆரியக்கூட்டம் அலைந்துதிரிந்த காலையில் நமது காவேரி, தென்பெண்ணை, வைகைக், கரைகளில்வீரர்களின் புகழ்த்தென்றல், குமரிகள்சூடிய மலர் மணத்துடன் கலந்து வீசிக்கொண்டிருந்தது.

மூவரசை தொட்டான் உயிர்விட்டான் கண்டவிழையன் என்கிறது சிலப்பதிகாரம். தொண்டைமான்இளம் பிறன். துவண்டனர் ஓரிய வீரர்கள் என்று உரைக்

12ம் பக்கம் பார்க்க.

அறிவியற் பகுதி

# இந்துமதமுந் தமிழரும்

——[ நக்கீரன். ]——

முன் தொடர்ச்சி.

ஒன்றன் உண்மையை ஐயந்திரிபற அறிந்து கொள்ள வேண்டுமானால், அதற்குக் கருவியாகப் பொறுமை என்னுஞ் சிறந்த கொள்கையைக் கடைப்பிடித்தாலன்றி முடியாதென்பதனை நன்குணர்ந்த நாவுக்கரசர், இந்து மதத்தின் பேரால் தாம் அடைந்த இன்னலைப் பொறுத்துக்கொண்டு, இன்னும் பார்ப்பனர் செய்யுங் கொடுமைகளைப் பார்த்தறிய விரும்பிப் பின்னும்பல சிவன் கோவில்களுக்குச் சென்றார். திருச்சத்திமுற்றம் என்னும் கோயிலை அவர் அடைந்து பார்த்தபோது, அங்கும் பார்ப்பனர் பல அடாத செயல்கள் செய்வதைக் கண்டு அவர்களைத் திருத்தமுயன்றார். அதனைக்கண்ட அவ்வூர்ப் பார்ப்பனர்கள் அவருக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணினார்களாயினும், அவர்களுக்கு அவ்வூரிற் போதிய செல்வாக்கு இல்லாமையினாலோ அல்லது வேறு காரணத்தாலோ அவரை ஒன்றுஞ் செய்யாது, 'நீ நல்லூருக்கு வா, பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லி விட்டு விட்டார்கள். பின் அவர் திருநல்லூர் என்னும் ஊரை அடைந்ததும், அங்கே அவரை நன்றாக நையப் புடைத்துத், தலையிலும் பிற இடங்களிலும் உதைத்து விரட்டி விட்டார்கள். இக் கொடுமைகளைக்கண்டு மனம்பொறுத நமது நாவுக்கரசர், "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்............நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார்..........." என்ற சொற்றொடர்கள் அமைந்த ஒரு தேவாரத்தால் விளக்கியுள்ளார்.

ஆனால், நாம் மேலே எடுத்துக் காட்டிய 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்' என்ற சொற்றொடருக்குச் சைவ அன்பர்கள் கூறும் பொருள் ஒரு சிறிதும் அறிவுக்குப் பொருந்துவதாயில்லை. அதற்கவர்கள் கூறும் பொருள் இது: "கடவுளை நினைந்துருகி வழிபடும் அடியார்களைத் துன்பங்களுக்கு ஆளாக்குவது சிவனுடைய இயல்பு" என்பதாகும். இக்கூற்றுக் கடவுள் நூலார் கொள்கையின்படியும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். எப்படியென்றால், கடவுள் இலக்கணத்தைக்கூறும் மதநூல்களெல்லாம், கடவுளுக்கு எட்டுவிதமான குணங்கள் உண்டென்றும், அவ்வெட்டனுள், தாமாகவே எல்லாவற்றையும் உணரும் ஆற்றலுண்டு என்பதும், ஒன்றென்றும், கிடந்து கூறியுள்ளன. எனவே, கடவுள் தமது அடியார்களின் உளத்தூய்மையை அறிவதற்காகவும், அவர்கள், துன்பம் இன்பம் ஆகிய இருநிலைகளிலும் தங்கள் கொள்கையினின்றும் ஒரு சிறிதும் மாறுபடார் என்பதற்காகவும் அவ்வடியவர்கட்குத் துன்பத்தை நல்கி அதன் பின்னரே இன்பப்பேற்றை அளிக்கிறார் ஒரு கடவுள் என்றால், அந்தக் கடவுள் சிற்றறிவுடையவர்கள் என்று சொல்லப்படும் மக்களைக் காட்டிலும் எந்த வகையில் உயர்ந்தவர் என்பது எமக்கு விளங்கவில்லை. இயற்கை அறிவும், எல்லா வல்லமையும் அமைந்துள்ளதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், தம்மை மெய்யன்போடு வழிபடும் அடியார் குழாங்களின் உண்மை நிலையை அறிவதன் பொருட்டாக அவர்களுக்கு மேலும்மேலும் துன்பத்தையே கொடுக்கிறார் என்பது ஒரு கேலிக்கூத்தேயாம். அற்றன்று, நீர் கூறுவது பொருந்தாது; கடவுள் தமது அடியவர்களைச் சோதிப்பதெல்லாம் தம்பொருட்டன்று; அடியவர்களின் அன்புப் பெருக்கையும் உறுதிப்பாட்டையும் உலகினர்க்குக் காட்டி அவர்களையும் அவ்வழிப்படுத்துதற் பொருட்டே இவ்வாறு திருவிளையாடல் புரிகின்றார் என்று கூறுவார் சிலர்க்கும் தக்க விடையிறுப்பாம். கடவுளைப் பார்க்கிலும் எல்லா வகையிலும் கீழ்நிலையிலுள்ள மக்கள், தங்களையொத்த ஒருவன் ஒரு குற்றத்தைச்செய்துவிட்டால், அவனைத்திருத்தி நல்வழிப் படுத்துதற் பொருட்டு, அவன் புரிந்த குற்றத்தைப்பிறரும் செய்யாதிருக்கப் பலர் முன்னிலையில் அவனைத் தண்டித்து நல்வழிப்படுத்த முயல்கிறார்கள். இந்த முறையையே பேரறிவுப் பெரும் பொருளான கடவுளும் கையாளுகிறார் என்றால், அவருக்கும் பிறஉயிர்களுக்கும் உள்ள வேறுபாடுதான் யாதோ? யாமறிகிலேம். கடவுளை அறிந்த அல்லது கடவுள் என்ற ஒன்று உண்டென்ற ஊற்றுக்கு நில்லா உரையை நம்பும் அன்பர்கள் தாம் இவ்வையப்பாடுகளை நீக்குதல் வேண்டும். கடவுட்டன்மை இது, மக்கட்டன்மை இது என்று பிரித்துக் காட்டிக், கடவுளுக்கும் பிற உயிர்களுக்கும் உள்ள வேறுபாட்டையும—உயர்வு தாழ்வையும் விளக்கவேண்டும். அங்ஙனமன்றி, மக்கள் செய்கின்ற சிறுசிறு காரியங்களையே கடவுளுஞ் செய்கின்றார்; ஆதலால், கடவுள் மக்களைப் பார்க்கிலும் எந்தவகையில் உயர்ந்தவராவார் என்று கேட்கும் பகுத்தறிவாளன்மீது சீறி விழுவதும், கடவுள் எதுவேண்டுமானாலும் செய்வார்; அவர் செயல்களில் தலையிடுவது மக்களாய்ப் பிறந்தோர்க்கு அடாது என்று துணிவு கூறுவதும் ஆகிய ஏமாற்றுதல்கள், கடவுட்டன்மை என்ற கண்மூடி வழக்கத்தை மண்மூடச்செய்து, கருத்தோடு வாழும் மக்கள் முன்னிலையில் செல்லாதென்பதை இனிமேலாவது உணர்ந்து மக்கட் பண்போடு வாழ முயல்வதே, மதமெனும் பேயால் பீடிக்கப்பட்டு மயங்கிக்கிடக்கும் மாந்தர்தம் செயலாம்.

மலடி மைந்தன் முயற்கொம்பை ஏணியாக அமைத்து வான் வெளியிலுள்ள மலரைப் பறித்து வந்தான் என்று ஒருவன் கூறும் கதையைப் போலத் தொடக்கமோ முடிவோ அற்ற ஒரு முழுமுதற் பொருளை மதநூல்கள் கூறும் வழியே சென்று அப்பெரும் பொருள் அளிக்கும் இன்பத்தைப் பெறலாம் என்று கூறுவது போன்ற அறியாமை பிறிதொன்றில்லை. மலடி மைந்தன் போன்றது கடவுள். முயற்கொம்பு போன்றது மதநூல்கள் கூறும் நெறி. வான் மலர் போன்றது கடவுள் அளிக்கும் பேரின்பம். இதுகாறும் கூறியவை கடவுளைப் பற்றிய சுருக்கமான விள்க்கமாகும். இதிலும் தெளிவடைய மாட்டார்க்கு, விரும்பினால், பின்னும் தெளிவாக விளக்கப்படும். ஐயுறுவார் கடாவுக. (தொடரும்)

## ஆச்சாரியாரை வீழ்த்த

தோழர்கள் சத்தியமூர்த்தி, பிரகாசம், பட்டாபி சீதாராமய்யா, கத்தே ரங்கைய்ய நாயுடு, முத்துரங்கம், பக்தவத்சலம், K. பாஷ்யம், ஆதிகேசவலு நாயக்கர், D. K. கண்ணப்பா, C. V. அழகேசன் ஆகியோர், ஆச்சாரியாரை வீழ்த்தப் படைதிரட்டுவார்கள் என்று கூறப்படுகிறது.

## பிரிட்டனுக்கு கனடா உதவி

கனடா, பிரிட்டனுக்கு, 268,000 டன் பன்றியிறைச்சியும், 54 கோடி முட்டைகளும், 12 கோடி பாலேடும் அனுப்பி உதவத்தீர்மானித்திருக்கிறது.

# அணைந்த தீபம்

அல்லது

## ஸர். அப்துல்லா ஹாரூன் (மர்ஹூம்)

(K. H. S. அப்துல் காதர் மதுரை)

முஸ்லிம் இந்தியா புனைந்த முத்தாரத்தில் மிளிர்ந்த முத்தொன்று உதிர்ந்ததென அறிந்த முஸ்லிம் சமூகம் இன்று சோகக்கடலில் மூழ்கியிருக்கிறது. ஸர் (தலை) ஆம்' சிந்துமாகாண முஸ்லீம் லீகின் தலை(வர்) அத்தோடு அகில இந்தியத் தபால் தந்தி இலாகா ஐக்கிய சங்கத்தின் தலை(வர்) மத்ய அசெம்பிளி உறுப்பினர், செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் காரிய கமிட்டி அங்கத்தினர், அதேபோல அ. இ. மு. லீக் காரியக்கமிட்டியின் மெம்பர்- சிந்துமாகாண மாஜிமந்திரி, செல்வம் படைத்த சீமான், அரசியல் ஞானம் படைத்த அறிஞர், அமீரே மில்லத்தின் அன்பிற்கிலக்கான அஞ்சா நெஞ்சுடைய அறப்போர் தளபதியின் பிரிவு, நமக்குப்பெருந்துயர்.

நவ நாகரீகத்திற் கேற்றாற்போல நறுக்கி விடப்பட்டசின்னஞ்சிறி தளவான சிகைதாங்கிய சிரம், பரந்த நோக்கத்தைப் பகிரங்கப்படுத்தும் படர்ந்த நெற்றிக் கடியில் அடர்ந்து தளர்ந்த புருவங்களுக்கூடே நிமிர்ந்து நிற்கும் நாசியின் இருபுறங்களிலும் சிந்தனையால் சிரமப்பட்டலுத்த சிறியகண்கள், அலங்கரிக்கப்பட்ட மீசை அதற்கேற்ற அழகிய தாடி ஆணுக்கேற்ற பருமனும் உயரமும் கூட்டி அதில் செந்நிறம் தீட்டி சித்தரித்த சிற்பம், அமீரேமில்லத் அவர்களைப் போல 66ம் ஆண்டையடைந்த அங்கம். பருவத்திற்கும் உருவத்திற்கும் பாகுபாடு உண்டு, எனினும் உணர்ச்சி யெனும் உறம்பெற்ற வீரஉள்ளம், சென்ற 26ம்தேதி இரவு (Club)களி பேரகத்தினின்று வீடுதிரும்பியதும் எதிர்பாராத விதமாக இருதய நோய் கண்டது மருத்துவர் வருமுன் அந்தோ! மனைவியாரருகிருக்க மரித்தார் (அடைகசாந்தி,அன்னார் ஆன்மா). தோன்றிய ஒன்று மறைந்தே தீரும் என்பது இயற்கையின் நியதி. மற்றவர்போல், மாற்றார் கைமாறி-மகுடத்தை யலங்கரிக்க ஏறி, உடைந்து ஒழி மழுங்கி, சிதைந்து சீர்குலைந்து விடாமல் சேவை மணங்கமழப் புகழுடம்பை விடுத்து பூதஉடம்பை எடுத்துச் சென்றதைக் குறித்து ஆறுதலடைவோமாக. அப்துல்லாஹ என்பதன் பொருள் இறையடியார் என்பதே அன்றும் இன்றும் இனியென்றும் இறையடியாரே. அவர்,

முஸ்லிம் இந்தியாவின் முதிர்ந்த சோலையில் மலர்ந்து மணம் பரப்பி உதிர்ந்த மலர்களின் உணர்ச்சியூட்டும் சரித்திரம் இருக்கிறது. நம் உள்ளத்தில், புவியரசர் புகழ் கவியரசர் இக்பால், சுதந்திர தாகத்திற்குப்பலியான அஞ்சா நெஞ்சுடைய அலிசகோதரர்கள், தொல்குடிப்பிறப்பும் நல்குடிச்சிறப்பும் வாய்ந்த நவாப் மம்டாட் முதலியோரின் பிரிவு நம்மைத் துயர் கடலில் ஆழ்த்தியது, அதை சகித்தோம். அரசியற் துறையில் விழித்தோம். ஆனால் அண்ணல் ஹாரூனின் பிரிவு இன்னொரு ஹாரூனை முஸ்லிம் யுவருலகத்தளபதியாய் முடிசூட்டியுள்ளது. மாதம் ஒன்று கூட ஆகவில்லை அலாஹபாத்திலே அ. இ. மு. லீ. மாநாட்டிலே காயிதேஅஃலம் கனிவுடன் விலைகூறியவாள் 31ஆயிரம் ரூபாய் விலைகொடுத்து மர்ஹூம் ஹாரூனால் வாங்கப்பட்டு மகன் ஹாரூனுக்கு வழங்கப்பட்டது மறந்துபோகவில்லை. ஆரியசூட்சியெனும் அடிமைத்தளையை அறுத்தெறிய வல்ல வீரவாளை அ. இ. மு. லீ. மாநாடு தந்தது! ஆனால் அதற்கேற்ற அன்பு, ஆதரவு, உணர்ச்சி, ஊக்கம், ஒத்துழைப்பு, எனும் பஞ்சலோகத்தால் வார்த்தெடுத்த பலம் மிக்க கேடயத்தை அகில இந்திய முஸ்லிம் வாலிபருலகு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைக்கருத்திலிருத்தி செயலாற்றக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

### மகா மகோ பாத்தியாய
## டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்
### அவர்கள் எழுதியது.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையை அநேக வருஷங்களாக இளமைப் பருவமுதல் அறிந்திருக்கின்றேன் தமிழ் நாட்டில் சிறந்த வைத்திய பரம்பரையிற் பிறந்தவர். வைத்திய நூல்களில் நல்லபயிற்சியுடையவர். இவருடைய மருந்துகளை நானும் என்னைச் சார்ந்தவர்களும் உபயோகித்து குணமடைந்திருக்கின்றோம். இவர் நல்ல நடையுள்ளவர். பொருளாசையுடையவரல்லர். தமிழ் வைத்தியம் வளர்ச்சியுடைவதற்காக மிகமுயன்று வேலைசெய்து வருகின்றார். அவர் முயற்சி பயன்படவேண்டுமென்பது எனது ஆவல்.

(ஒ. ம்.)

**உ. வே. சாமிநாத ஐயன்,**
திருவேட்டீசுவரன் பேட்டை,
12—6—1916. திருவல்லிக்கேணி சென்னை.

---

**பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்**
தற்கால ஆலோசனை இடம்
148. நடுத்தெரு, சேக்குப்பேட்டை, காஞ்சிபுரம்.

---

### அந்த ஆசைதானு!

**கேள்வி:** தோழர் சத்தியமூர்த்தி, ஆச்சாரியார் தீர்மானங்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யப் போகிறாராமே, என்ன காரணம்? உண்மையாகவே அவருக்குப் பதவி வேட்கை, இல்லையா?

**பதில்:** இது என்ன பிரமாதமான கேள்வி! ஆச்சாரியார் பாகிஸ்தானை ஆதரிக்கிறார். இதை எதிர்க்க வடநாட்டு மார்வாடி, குஜராத்தி இந்து மகாசபைக்காரர்கள், கிளம்புவார்கள். பிரசாரத்துக்குப் பணம் குவியும். அந்த "சான்சை" வேறு ஆசாமிக்கு விடுவானேன். வருகிறதை வரவிலே வைப்போம், என்று மூர்த்தியர் "நான் ஆச்சாரியார் தீர்மானத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்கிறேன்" என்றுகூறுகிறார். வேறு என்ன இருக்கிறது!

### சால்ஜாப்பு காட்டுகிறார்!

**கேள்வி:** பாகிஸ்தான் விஷயமாக ஆச்சாரியார் தமது சம்மதத்தைத் தெரிவித்தாரே தவிர, தமிழ் நாட்டுப் பிரச்சினையான, பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் விஷயமாக ஏன் வாய்திறக்கவில்லை?

**பதில்:** அடடே! அங்கேதானே சூட்சமம் இருக்கிறது. அந்த விஷயத்தைப் பேசித் தீர்த்துவிட்டால் பிறகு இந்த ஆசாமிக்கு இவ்வளவு செல்வாக்கு இருக்க முடியுமா? பார்ப்பன ஆதிக்கத்தைக் காப்பாற்றத்தானே, பாகிஸ்தானையாவது ஒப்புக்கொண்டு பார்ப்போம் என்று ஆச்சாரியார் சால்ஜாப்பு காட்டுகிறார்!

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்

[ வீனஸ். ]

## அழகியும் 500 கழுதைகளும்!

வாயுவேக மனோவேகமாகச் செல்லக்கூடிய புரவி மீதமர்ந்து, வேல்வாள் ஏந்திய வீரர்கள் நுறைதள்ளும் வாயுடைய புரவிகளின் மீதேறி முன்னும் பின்னும் வரச்சென்று வெஞ்சமர் புரிந்து வெற்றிக்கொடி நாட்டிய வீரன்போல், ஐந்நூறு கழுதைகள் முன்னால்செல்ல, தங்கலாடமும், தங்கமேலங்கியும் அணிந்த குதிரைகள் பூட்டப்பட்ட அழகிய தேரில் அமர்ந்துகொண்டு, பொன்கொடியோ, பொலிவின் வடிவோ, பூங்கொம்போ என்று பலரும் எண்ணும் வண்ணம் எழிலமைந்த **பாப்பேயா**, பலஸ்தீன் பரிமளக் கந்தம் பூசி, எகிப்து நாட்டுத்தைலத்தைத் தடவிக்கொண்டு, விலைமதிக்கமுடியாத ஆபரணங்களை அணிந்துகொண்டு, ரோம் நகரில், ரமணீயமாக ஊர்வலம் வருவாள்! வருக! வருக! என்று வெற்றிவீரரை மக்கள் வாழ்த்தி வரவேற்பது போல, பாப்பேயாவை, மந்திரி, பிரதானியரும், காவலர் சேவகரும், "அரசரின் அன்பின் இருப்பிடமே வருக! அழகின் அவதாரமே வருக!" என்று கட்டியங்கூறி வரவேற்பர். இகலோகத்திலுள்ள சுக போகத்தில் இன்னம் என்னபாக்கி இருக்கிறது, எல்லாம் பார்த்தாகிவிட்டது என்று எண்ணி மகிழ்ந்து, காவலர்கள் ஏவலராக உள்ளத்தைக்கண்டு களித்து, பாப்பேயா, தனது நிலைமையைக்கண்டு பூரிப்பாள். இவ்வளவு நிலைவந்ததற்குக் காரணம், தனது அழகு என்பதை அவள் மறக்கவில்லை. ரோஜா அழகாக இருப்பதனாலேயன்றோ, செடியிலுள்ள முள்ளையும் கவனியாது, அதனைப் பறிக்க மக்கள் முன்வருகின்றனர்! தேனீக்கள் கொட்டினாலும் தாங்கிக்கொள்ளலாம் என்று மக்கள் துணிவுகொள்வதற்குக்காரணம் என்ன? தேனின் சுவைதானே! அலையும், சுழலும், சுறாவும், பிறவும் தாக்குவதையும் பொருட்படுத்தாது, மக்கள் மூச்சை அடக்கிக் கடலில் மூழ்குவது, உள்ளே விலையுள்ள முத்து கிடைக்குமென்றுதானே! ஆயிரமாயிர மடி சுரங்கத்தை வெட்டி, அந்தகாரத்தில் நுழைந்து, பார்ப்பது, தங்கம் கிடைக்கிறதென்பதற்காகத்தானே! அதுபோல், அழகு இருக்கிறதென்பதற்காகத்தானே, மன்னன்; அன்னை, மனைவி, ஆசைநாயகி ஆகியோரையும் மதியாதுவிலக்கி, ஊரார் ஏசுவரே என்பதுபற்றிக் கவலைகொள்ளாது, நண்பனின் நாயகியை நாம் களவாடுவதா வென்பது பற்றிக்கவலைகொள்ளாது, நம்மை நாயகியாக்கிக்கொண்டான். மன்னனை இவ்வளவும்செய்ய வைத்த அழகு மங்குமானால், என்னாகும்! தேனின் சுவைபோயின், பயன் என்ன? தேஜஸ்குறைந்தவளைத் தேடுவாருண்டோ!—என்று பாப்பேயா யோசித்து, இயற்கையாக அமைந்த எழில், குறையாதபடி, செயற்கை முறைகளைச் செவ்வனே செய்துகொண்டாள். அழகுக்கு அழகு செய்வதுமட்டுமல்ல, அழகுஅழியாதிருக்க அனேகம் வழிகள் தேடினாள். அவைகளில் ஒன்றுதான், ஐந்நூறு கழுதைகள்! கழுதையின் பாலிலே குளித்தால், மேனியின் மினுமினுப்பும், மிருதுவும், அதிகரிக்குமாம்! காலத்தால், மேனிசுருங்கி, சதை பசையையும் பளபளப்பையும் இழக்கும். கழுதைப்பால், இதனைத்தடுக்குமாம்! இதன்பொருட்டு, பாப்பேயா, 500 கழுதைகளைத் தனது அந்தப்புரத்தில்கட்டிவைத்தாள். அனுதினமும், கழுதைப்பாலிலேதான் ஸ்நானம்! அகில்புகையினால் உடலெங்கும்மணம் புகவைத்தல்! அளகபாரத்துக்கு அரபுநாட்டு வாசனைத் தைலம், இங்ஙனம், அழகுவளர அவனியிலெங்கெங்கு என்னென்ன முறைகள் கூறுவரோ அவ்வளவையும் முறைதவறாது செய்துகொண்டு, நிலக்கண்ணாடி முன் நின்று, தனது அழகைக்கண்டு தானே ஆனந்தித்து, கூந்தல்சரியாகஇருக்கிறதா என்பதைத் தடவிப்பார்த்து விட்டு, களம் புறப்படும் வீரன்போல், கண்கவரும் கவர்ச்சி, சிந்தாது சிதையாது இருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டபிறகே பாப்பேயா, தர்பார் செல்லுவாள்! அழகில் அவளுக்கு அவ்வளவு அக்கரை!

**பாப்பேயா** நீரோமன்னனின் இரண்டாம்மனைவி! நீரோ, அவளுக்கு மூன்றாவது புருடன்!! நீரோவின் முதல் மனைவி, ஆக்டேவியா என்பவள். அடக்கமும் அன்பும், அறிவும் பண்புங்கொண்ட ஆக்டேவியா, நீரோவுக்குப்பிடிக்கவில்லை. அவன் சிங்கார வல்லியை வேண்டினான், ஆக்டேவியா, பெருந்தன்மைக் குணமுடையவள். அவளுக்குஆடம்பரம், தெரியாது. நீரோவின் நாட்டம், ஆக்டே எனும் அடிமையிடம் வசப்பட்டது. அவளுடன் ஆடிப்பாடிக் காலங்கழித்தான். அவளுடைய சேர்க்கையில் சொக்கினான். அரசியை அலட்சியஞ்செய்தான். காட்டுரோஜாவைச் சூடிக்களித்திருந்த நீரோவின் நேத்திரங்களையும் நினைப்பையும், **பாப்பேயா** பறித்துக்கொண்டாள். அவளுடைய ஆலிங்கனத்துக்காக, மன்னன் நீரோ, பன்னெடு நாட்கள், பதைக்கும் மனதுடன் காத்துக்கொண்டிருக்க நேரிட்டது. சுந்தராங்கி சுலபத்திலே கிடைத்துவிட்டால், ஆசை அறுபதுநாள், மோகம் முப்பதுநாள் என்று கூறுவார்களே அதுபோல், கண்டோம், கூடினோம், களித்தோம், விட்டோம் என்று காதற்கூத்து முடிந்துவிடும், எனவே, மன்னனின் மனம் சதாகாலமும் தன்னை எண்ணி எண்ணி வாடவேண்டும், ஆசை ஜ்வாலையாக வேண்டும், தணியாத தாபத்தால் அவன் தத்தளித்து, என்ன நேரிட்டாலுஞ்சரி, எது போனாலுஞ்சரி, அவள் எனக்குக் கிடைக்கவேண்டும் என்ற துணிவுகொள்ளவேண்டும், பிறகே அவனுக்கிசைய வேண்டும் என்பது பாப்பேயாவின் கருத்து! நல்ல மூலிகைவேண்டுமானால், காடும் மேடும், மலையும் மடுவும் குறுக்கிட்டாலும் நிற்பரோ! அதுபோல் நான் தேவை என்றால், நாலாறுமாதங்கள் நோன்பிருக்கட்டுமே! என்று எண்ணினாள். அவ்வளவு சமர்த்து அவளுக்கு! தொட்டதும் துவளுபவளல்ல! கேட்டதும் வரந்தருபவளல்ல! பாப்பேயா, போர்க்களத்திலே, திட்டத்துடன் வேலைசெய்து, எதிரியை முறியடிப்பதுபோல், காமக்களத்திலே, தந்திரமான திட்டம் வகுத்துக்கொண்டு, முறைப்படி போரிட்டு, முடிமன்னனைத் தன்பிடியிற் கொண்டுவந்தாள்.

**பாப்பேயா** புகழ்மிக்க குடியிற் பிறந்தவள். புன்னகை பூத்த முகத்தழகும், கீதக்குரலழகும், கிண்கிணி சதங்கை ஒலிபோன்ற பேச்சழகும் பெற்றவள். நகைச் சுவையுடன் பேசுவதில் மிக்கதிறம்பெற்றவள். மன்னர்களிடம் மண்டலங்களின் ஆட்சிமுறைப்பற்றிய நுணுக்கம் பேசுவாள், படைத்தலைவர்களிடம் போர் முறைகள் பற்றியும், கவிவாணர்களிடம் கவிதா விற்பன்னம் பற்றியும், ஓவியக்காரரிடம் இயற்கையின் எழில்பற்றியும், பேசுவாள். ஒவ்வொருவரும், பாப்பேயா பலதுறையின் விஷயங்களையும் பயின்றவள் என்று பூரிப்பர். கேளிக்கைக்காரருக்கோ, பாப்பேயாவின் தரிசனமே போதும்! அவள் பேசிவிட்டாலோ, ஆனந்த லாஹிரிதான்! அவளுடன் உலவினாலோ, போதைகொண்டவர்போலாவர்! அவ்வளவு லயிக்கச் செய்யும் இயல்பு படைத்தவள் பாப்பேயா!

சிறுமியாக இருந்ததுமுதலே, அவள் சிங்காரியாகவே இருந்தாள். சீமான்களின் சிந்தனையைக்குழப்பினாள்! அவளது பார்வையும் பேச்சும் அவர்களைப்

(9-ம் பக்கம் பார்க்க)

## செங்கற்பட்டு மாவட்ட ஜஸ்டிஸ் மாநாடு வரவேற்புக் கழகத் தலைவர்

# T. ஷண்முகம் பேருரை.

பெரியார் அவர்களே, பாரதியார் அவர்களே, பிரதிநிதிகளே தோழர்களே!

இன்று இங்கு கூடியுள்ள செங்கற்பட்டு மாவட்ட நீதிக்கட்சி மாநாட்டிற்குத் தாங்கள் பெருந்திரளாக வந்து கூடியிருப்பது கண்டு, களித்து, நல்வரவு கூறி வரவேற்கிறேன். தமிழர்களுக்கோர் காட்சியாகவும், ஆரியர்க்கோர் மிரட்சியாகவும், விளங்கும் இம்மாநாட்டிலே, நமது தலைவர்களும், தளபதிகளும், வீர வாலிபர்களும், தாய்மாரும் வீற்றிருக்கக்காணும் எந்த தமிழர்க்குத்தான் பூரிப்பு உண்டாகாது. நமது கட்சியின் நிலைமைபற்றி சந்தேகிக்கும் பேர்வழிகள், இந்த சற்சங்கத்தைக்கண்டு தெளிவுபெற வேண்டுகிறேன். இங்கு இன்று நமது தலைவர்கள் செய்யப்போகும் சொற்பொழிவின் பொருட்சுவையைப்பருகி, பேதமை தெளியவேண்டும்.

நீதிக்கட்சி, தமிழரின்கட்சி, தமிழரின் தன்மானத்தைக் காக்கத்தோற்றுவிக்கப்பட்டகட்சி, நாட்டிலே உள்ள நானாவிதமான கோளாறுகளைப் போக்கப் புரப்பட்ட இயக்கம். தீரத்தியாகரும், வீரநாயரும் வித்திடமுளைத்த ஆல்! இதன் நிழலில், தமிழர்படை தங்கிற்று. இதனாதரவில், பனகலசர் நாட்டை பரிபாலித்து, மக்கள் முன்னேற, தமிழர் வாழ, வழிபல செய்தார். சமுதாயத்திலே இழிவாகக்கருதப்பட்டு, மதத்துறையிலே மடத்தனத்தை, சூட்டிக்கொண்டமூம் கபோதிகளாக்கப்பட்டு, பொருளாதாரத்துறையிலே, உழைத்து உழைத்து உருச்குலையும் நிலைமையிற்கொண்டு போய்ச்சேர்க்கப்பட்டு,' தமிழர், நடைப்பிணமாக்கப்பட்டனர்.

எங்கும் ஆரிய ஆதிக்கம் தலைவிரித்தாடி, தமிழரைத் தாசர்கூட்டமாக்கி, அழித்துவரத் தொடங்கிற்று. தமிழர், தமது நிலைமையைத்திருத்தி, அமைக்கவும் சக்தியற்று, சாத்திரத்துக்கும் ஜாதிக்கும் அடிமைப்பட்டு, அந்தகாரத்தில் தவித்தபோது, நமது மாபெருந்தலைவர்கள், முன்வந்து, நீதிக்கட்சியை அமைத்து, ஆரியத்தோடு போர்தொடுத்தனர்.

"பல நூற்றாண்டுகளாக நமது பாதத்தைத் தாங்கிக்கொண்டிருந்த கூட்டம் புரட்சி செய்வதா! நாம் அதற்கு இணங்குவதா!' என்று ஆரியம் சீறிற்று. நமது தலைவர்கள் அஞ்சினாரில்லை, அயர்ந்தாரில்லை!. வீரத் தோழர்களின் துணை கொண்டு, இப்போரை இந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாக நடத்திக்கொண்டு வருகின்றனர். இன்றும் அப்போர் நடந்து கொண்டே வருகிறது.! தமிழரின் விடுதலை கிடைக்குமட்டும், போர் ஓயாது!!

இடையே காந்தீயமும் போலித்தேசியமும், தமிழரை மயக்கியும் மிரட்டியும், ஆட்டிப்படைத்தது. அந்த மயக்கத்தின் முதிர்ச்சிதான், காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்படும் நிலைமையை உண்டாக்கிவைத்தது. ஆனால் வெகு விரைவில், காங்கிரஸ் காரர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பொது மக்கள் உணர்ந்தது கொள்ள முடிந்தது.

சுயராஜ்யம் வாங்கித்தருவதாகக் கூறிய காங்கிரசார் வெள்ளைக்காரருக்கு வெண்சாமரம் வீசினர். அடக்குமுறைகளை ஒழிக்கச் சென்றவர்கள், அட்டகாச ஆட்சி நடத்தி அடக்கு முறையைக் கைசலிக்க நடத்தினர். எத்தனை புதுப் புதுவரிகள்! எவ்வளவு தொல்லைகள்! இந்தியை திணித்தனர். அதை எதிர்த்தவர்களை பெரியார் உள்பட ஆயிரம் பேர்களுக்கு மேல், ஆண்களையும் பெண்களையும் சிறைப்படுத்தினர். முஸ்லீம்களையும், தமிழரையும் மூலையில் உட்காரவைத்து, ஏகபோக ஆட்சி செலுத்தினர். தமிழர் கோபக்கனல், அவர்களைப் பொசுக்கத் தொடங்கிற்று. பெரியார் தலைமையில் எழுந்த எதிர்ப்பு அவர்களை மிரட்டிற்று. மக்களின் 'மனவேதனை அவர்களைத்தாக்கத் தொடங்கிற்று. 27.மாதங்களில் அவர்கள்பதவியை விட்டு ஓடிவிட்டனர்.

பிறகாவது அவர்கள் கேடு செய்யாதிருந்தனரா? கொடியயுத்தம் ஐரோப்பாவிலே கிளம்பியதும் நமது கட்சி தலைவர்கள், இந்தப்போர் இந்நாட்டிற்கும் பரவும், அதன் ஆரம்பத்திலேயே, அடக்கவேண்டும், அதற்காக, பிரிட்டனுக்கு பொருளும் வீரர்களும் தந்துதவ வேண்டும் என்று அறிவுறுத்தினர் அந்த நேரத்திலே காங்கிரசார் நாட்டைப்பற்றிய கவலையின்றி பிரிட்டிசாருடன் போய்ப் பேசவும், அஹிம்சை என்ற அவலமான கொள்கைபற்றிக் கூறவும், முற்பட்டனர். பல்வேறு நாடுகள் நாஜியத்தால் நாசமாக்கப்பட்டுக்கொண்டுவந்த காலத்தில், இவர்கள் நயவஞ்சகம் பேசித்திரிந்தனர். நமது நாட்டு வீரர்கள், லிபியா, ஈராக், ஈரான் ஆகிய பல இடங்களிலே இரத்தம் சிந்திக்கொண்டிருந்த சமயத்தில்,இவர்கள் சிறைச்சாலைகளில்நெய்சொட்டச் சோறு தின்று இராமாயண காலட்சேபம் செய்து கொண்டிருந்தனர். தமது சத்தியாக்கிரகம் ஆதரிப்பாரற்று, அனாதைப்பிணமாகும் என்று அஞ்சி சில நாட்களுக்குப்பிறகு, அதைவிட்டு வேறு சூழ்ச்சியில் இறங்கினர். அகிம்சையை ஆச்சாரியார் புனாவில் புதைத்தார். காந்தியாரை ஆசிரமத்துக்கு அனுப்பிவிட்டு, வைசிராய் மாளிகையை வலமாகவும் இடமாகவும் சுற்றிவந்து, "வந்திருக்கும் போர்பயங்கரமானது, பிரிட்டனை ஆதரிக்கவேண்டும், அதற்காகவே அதிகாரம் நமக்கு வரவேண்டும்." என்று ஆச்சாரியார் ஆரிய வித்தையைக் காட்டிப்பேசினார்.

நாட்டிலுள்ள பலகட்சிகளும் ஒன்றுபட்டுக்கேட்டால் மட்டுமே ஏதேனும் நாங்கள் செய்யமுடியும் என்று பிரிட்டன், திட்டமாக,சர். ஸ்டாபோர்டு கிரீப்ஸ் மூலம் தெரிவித்துவிடவே, ஆச்சாரியார் இப்போது பாகிஸ்தானை ஆதரிப்பதாகக் கூறி முஸ்லீம்களைமயக்கி, பிரிட்டிஷாரை எதிர்த்து பதவிபெறலாம் என்று மனப்பால் குடிக்கிறார். ஜனாப் ஜின்னா ஆச்சாரியின் தந்திரத்தை நன்கு உணர்ந்தவர். பிரிட்டிஷார் மயங்கினாலும், ஜனாப் ஜின்னா மயங்கமாட்டார்.

தமிழ்நாட்டுப் பிரச்னையைத் தீர்க்காமுன்னம், தமிழர்கோரும் தனிநாட்டு அமைப்பு ஒப்புக்கொள்ளப்படாமுன்னம், ஆச்சாரியார் எத்தகைய முயற்சி செய்து "தேசிய சர்க்கார்" ஏற்படுத்தினும், அது சர்க்காராகவோ, தேசீயமாகவோ இராது என்பது உறுதி. ஆச்சாரியார் இனியேனும் திராவிடநாட்டுப் பிரிவினைத்திட்டத்தை ஒப்புக்கொண்டு தமிழகத்தைத் தகர்த்துவரும் ஆரியத்தை அழிக்கும் அறப்போருக்கு ஆதரவு தருவாராக! நாம் கேட்கிறோம்!! ஆனால் அதனை ஆச்சாரியார் எங்ஙனம் செய்யமுடியும்? தற்கொலை செய்துக்கொள்ளச் சொன்னால் யாருக்கு சுலபத்தில் மனம் இடந்தரும்! அதுபோல், ஆரிய ஆதிக்கத்தைச் செப்பனிட்டுப்பலப்படுத்தவே பாடு படும் பார்ப்பனத்தலைவர் எங்ஙனம் ஆரிய அழிவுக்குத் தமது ஆதரவைத்தரமுடியும்! தோழர்களே, அந்தப்

8ம் பக்கம் பார்க்க

**தேவை.**

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

**காஞ்சி நிதி லிமிடெட்,**
காஞ்சீபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 17—5—42 [காஞ்சி.

# அவர் அவ்வளவு முட்டாளல்ல!

ராஜபார்ட்டுக்கு வேண்டிய கெம்பீரம் இல்லை! ஸ்திரீபார்ட்டுக்குத் தேவையான சோபிதம் இல்லை. சோகரசத்துக்கோ உருக்கும் குணமில்லை. எந்த வேடத்தில் தோன்றினாலும், கல்மாரி காண முடிகிறதே யொழிய, மலர்மாரி காணமுடியவில்லை. ஏதோ கொஞ்சம் காசுகிடைக்கிறது, என்றாலும், நடிகர் உலகிலே இடமில்லை. காரணம் கம்மலான சாரீரம், தாளமோ பூஜ்யம், சரீரத்திலோ தளர்ச்சி, நினைப்போ நடிப்பின்மீது செல்வதில்லை. இத்தகையநடிகர், நாலாறு மாதங்களோ, ஆண்டுகளோ, "சங்கீத விற்பன்ன கோலாகலர்" என்ற பட்டத்தைச் சுமந்துகொண்டிருந்துவிட்டுப், பிறகு,அவன் அனுமந்தவேடத்துக்குத் தானே பொருத்தம். அவன் பாடுவதைக் கேட்டால் கழுதை கெட்ட வண்ணான் பழுதெடுத்தோடி வாரானே" என்று ரசிகர்கள் கண்டிக்கக் கேட்டு, மூலையில் உட்கார்ந்துதீர வேண்டிவரும். நடிப்புத்திறமை இல்லை என்றதும் நாடகமேடைக்கும் நமக்கும்பொருந்தாது என்று சென்றுவிடுதல் புத்திசாலித்தனமேயொழிய, 'அந்தப்பார்ட்' முடியாவிட்டால், 'இன்னொரு பார்ட்' போட்டு ஆடிப்பார்ப்போம் என்று எண்ணும் நடிகன், நாட்டுக்கே வேம்பாவான்!

அரசியலில் ஆச்சாரியாரின் கதி அதுதான், என்பதை நாம் முன்கூட்டியே கூறிவிடுகிறோம். அவரது அடியார்கள் துடிக்கலாம், ஆனால் உண்மையை உரைக்கிறோம், காலம் தீர்ப்பளிக்கட்டும்.

இந்திய உபகண்டத்து விடுதலைப்போரை நடத்த, வீரமும் விறுவிறுப்பும், அஞ்சாத நெஞ்சமும் அணையாத ஆர்வமும், ஜாதி குலம் குடும்பம் ஆகியவற்றைக் கடந்த உள்ளமும், எத்தகைய கஷ்டநஷ்டத்துக்கும் உள்படும் சித்தமும், எவ்வித மோகனாஸ்திரத்துக்கும் மயங்காத மனப்பான்மையும் கொண்டவர்கள், "அரசியல் யூகம் அறிந்தவர்கள், சரிதத்தைச் சான்றாகக் கொண்டவர்கள், கொதிக்கும் குருதி, முறுக்கேறிய நரம்பு கொண்டவர்கள், உலகப்போக்கை உய்த்துணரும் பண்பினர் வேண்டும்! பசப்புமொழி, பஞ்சாங்கப் பேச்சு, பதவிப்பற்று கொண்டோர், பலநாளோ சில நாளோ படாடோபமாக உலவலாம், ஆனால் அவர்கள் இலட்சியம் வெற்றிபெறாது.

ஆச்சாரியார் அறிவாளி ஆனால் காலதாமதமாகியே அவருக்கு அறிவு உதயமாவது வாடிக்கை! அஹிம்சை காலத்துக்கேற்றதல்ல என்ற அறிவு அவருக்கு இன்று இருக்கிறது ஆனால் அது சரியான நேரத்தில் தோன்றிற்றா! இல்லை! ஜப்பான் முதலிய நாட்டார் இங்கு நடமாட விடக்கூடாது என்ற அறிவு அவருக்கு இன்று இருக்கிறது. ஆனால் அது எவ்வளவு காலதாமதமாகித்தோன்றிற்று! நாட்டைப்பாதுகாக்க, போரில் உதவிசெய்ய வேண்டும் என்ற அறிவு போர்தொடங்கிய மூன்றாமாண்டன்றோ இம்முதியோருக்குதித்தது! நாட்டிலே உள்ள பலகட்சிகளும் கூட்டாக ஆள்வதேமுறை என்ற அறிவு உதயமாகி இருக்கிறது, ஆனால் நினைப்பிலே இதுநிலைக்க எவ்வளவு காலம் பிடித்தது! முஸ்லீம்களைச் சமரசபடுத்தாமுன்னம், சாந்தியும் சக்தியும் பிறக்காது என்ற அறிவு உண்டாகியிருக்கிறது. மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தி! ஆனால், அது 1935 முதல் இருந்திருந்தால் நாட்டின் நிலைமை இன்று எப்படி இருந்திருக்கும். காங்கிரசைவிடத் தேசமே முக்கியம் என்று நேற்று பேசுகிறார் கோகலேமண்டபத்தில், ஆனால் காங்கிரசே தேசம், தேசமே காங்கிரஸ் என்று எவ்வளவு பிதற்றியிருக்கிறார், பேதமையுடன் எவ்வளவு காலம் புரண்டு கொண்டிருந்தார்! கோகலே ஹாலிலே, கூச்சலும் குழப்பமும் உண்டானதும், அபிப்பிராயத்தை எடுத்துரைக்க உரிமை உண்டு என்று கூறினார். ஆனால் இதே விதமான உரிமையைக்கோரிய நரிமனை நசுக்க கரேயைக்கவிழ்க்க, ராயை விரட்ட, சுபாஷைப் பொசுக்க, இவர் எவ்வளவு துடைதட்டிக்கொண்டுகிளம்பினார். "தனிஆளாக இருப்பினும், காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டாலும், எனது அபிப்பிராயத்தை நான் அடுத்தடுத்துக் கூறிக்கொண்டுதான் இருப்பேன்" என்று வீரம் பேசுகிறார் இன்று. ஆனால் இவ்விதமான உரிமையைக் கேட்டவர்களைப்பற்றி ஊரெங்கும் தூற்றி, உறுமி, வீண்கலகம் விளைவித்தார். பாகிஸ்தான் ஆதரிப்பைக்கேட்டு இமயம்-முதல் குமரிவரை உள்ள முஸ்லீம்கள் சந்தோஷப்படுகிறார்கள். என்று இன்று கூறுகிறார். ஆனால் நேற்றுவரை, இமயம் முதல் குமரிவரை உள்ள முஸ்லீம்களை இவர் எவ்வளவு கண்டித்தார், ஏளனம் செய்தார், எதிர்த்தார்! இஸ்லாமியமலருக்கு பாகிஸ்தானே மணம், முஸ்லீம் வீணைக்கு பாகிஸ்தானே நாதம், என்ற அறிவு, பாகிஸ்தான் கிடைத்தால்தான் முஸ்லீம்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்ற அறிவு அவருக்குப்பிறக்க, எத்தனை ஆண்டுகள் ஆயின!

இன்று தோன்றியுள்ள, காங்கிரசைவிடத் தேசம்பெரியது, காங்கிரசின் கட்டளையைவிட நாட்டின் அழைப்பு முக்கியமானது, கட்சி முன்னேற்றத்தைவிட மக்களின் ஒற்றுமையே முக்கியமானது, முஸ்லீம்களைச் சரிப்படுத்துவதே ராஜதந்திரம், என்ற இந்த அறிவு, ஆச்சாரியாருக்கு, உதயமானது மகிழ்ச்சிக்குரியதே, ஆனால் எவ்வளது காலதாமதமாகிப் பிறந்தது என்பதை எண்ணிப்பாருங்கள்.

போர்துவங்கியதும் இந்த அறிவுடன் ஆச்சாரியார் முனைந்திருந்தால், இன்று நாட்டின் நிலை எப்படி இருந்திருக்கும்! காலை 8-மணிக்குப்புறப்படும் இரயிலுக்கு 10-க்கு வீட்டைவிட்டுப் புறப்படுகிறார் நல்ல சகுனம் பார்த்துக்கொண்டு! இரயில் கிடைக்கவா போகிறது! அதிலும் அவர் டிக்கட் வாங்க எடுத்துச்செல்லும் பணம், செல்லுபடியாகாது!!

திராவிட நாட்டுப் பிரிவினையை இன்னமும் அவர் மௌனத்தால் மாய்க்கலாம் என்ற கள்ளக்கருத்து கொண்டிருக்கிறார். பாகிஸ்தான் வழங்குவதன் மூலம் திராவிடஸ்தான் கிளர்ச்சியைக் கருவிலேயே அழிக்கலாம் என்பது அவரது எண்ணம்.

ஆனால் இந்த விஷயத்திலும், அவருக்கு இன்று தோன்றாவிட்டாலும், அறிவு, சற்று காலதாமதமாகியாகிலும் தோன்றும்.

அவர் கேளாக்காதர், சுலபத்திலே அவர் செவிக்கு விஷயம் புகுவதில்லை! கருப்புக் கண்ணுடியார், பார்வையில் பொருள்கள் சரியாகப்படுவதில்லை. ஆனால், இப்போது பாகிஸ்தான் சம்பந்தமாக அவருக்குப் பக்குவமான அறிவு தோன்றியிருப்பதுபோல், சற்று காலதாமதமாகி, திராவிடநாடு தனிநாடாக வேண்டிய தன் அவசியமும் அவருக்குப் புலப்பட்டேதீரும். அந்த அறிவு பிறக்காமுன்னம், செல்லாக்காசு எடுத்துக் கொண்டு இரயிலுக்கு செல்லும் சிதைந்த சிந்தனைக்காரரின் நிலைமைதான் அவருக்கு இருக்கமுடியும்.

தான் சொன்னதைத் தானே மறக்கவும், தனது கொள்கையைத்தானே கொளுத்தவும், தனது கட்சியைத்தானே கண்டிக்கவும், தனது சீடர்களிடமிருந்து தானே தொல்லை பெறவுமான, இத்தகைய நிலை அவர் பெற்றுவருவதற்குக் காரணம், அவர், சரியான காலத்திலே கருத்தைக் கூராக்கிக்கொள்ளாத காரணத்தால் தான். அவருடைய 'இனம்' அவரைக் காப்பாற்றியிரா விட்டால், அவர் மூலைக்குச்சென்று நெடுங்காலமாகி இருக்கும்.

இப்போதும் கேட்கிறோம், பாகிஸ்தானை ஒப்புக்கொண்டு திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றி மௌனம் சாதிப்பது, அறிவாகுமா? ஆச்சாரியார் என்ன எண்ணுகிறார்? பாகிஸ்தான் ஆதரிப்புக்காக இனி அவர் திரட்டித்தீரவேண்டிய காரணங்கள், சக்திகள், பாகிஸ்தானின் தோழமைக் கொள்கையாகிய திராவிட நாட்டுப் பிரிவினைக்கு பக்கபலமாகாமலா போகும்! ஏன் இதனை முன்கூட்டியே உணர்ந்து, இன்றே அவர்திராவிடநாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொண்டு கண்ணியமாகக் காலங் கழிக்கக்கூடாது என்று கேட்கிறோம். பாகிஸ்தான் கொடுத்துவிட அட்டியில்லை என்றபிறகு, திராவிட நாட்டை மறக்க, எந்தமானமுள்ள, அறிவுள்ள, நெஞ்சில் ஈரமுள்ளவன் முன்வர முடியும்!

பாகிஸ்தான், இந்தியாவில் மூன்றிலோர் பாகம், வடமேற்கு எல்லைப்புறம், பஞ்சாப், சிந்து, வங்காள அசாம் பகுதிகள் கொண்ட வட்டாரம். இன்று ஆச்சாரியார் ஒப்புக்கொள்கிறபடி, இந்த மூன்றிலோர் பாகம், பிறைபறக்கும் பிரதேசமாகி, மூன்றிலிரண்டு பாகம் இந்து ஆட்சியில் இருக்கும்! இது அவரது நினைப்பு! மூன்றிலொன்றுபோனாலும், மூன்றிலிரண்டு பாகமாவது இந்து ஆட்சியில் இருக்கட்டும் என்று தந்திரமாகத் திட்டமிடுகிறார்.

இது ராஜதந்திரம் என்று அவர்கருதலாம். இது அறிவின் கூர்மை என்று அவரது அடியார் கூட்டம் கூறலாம்.

நாம் கூறுகிறோம், இதைப்போன்ற எதிர்காலத்தை முன்கூட்டி உணரமுடியாத போக்கு வேறு இருக்கமுடியாது. இந்தியாவில் மூன்றிலோர் பாகம் முஸ்லீம் ஆட்சியிலும், மூன்றிலிரண்டு பாகம் இந்து ஆட்சியிலும் இருக்குமானால், இந்தியகண்டத்தில் சிறு பாகம் முஸ்லீமிடமும், பெரும்பாகம் இந்துவிடமும் இருக்குமானால், சர்வதேச வியவகாரங்களிலும், கண்டத்துக் குள்ளாகவே தோன்றக்கூடிய வியவகாரங்களிலும், பாகிஸ்தானுக்கு ஏற்படக்கூடிய மதிப்பைவிட, செல்வாக்கைவிட இந்துஸ்தானுக்கே அதிகம் ஏற்படும்! இதனை முஸ்லீம் ஆட்சியினர் விரும்பமாட்டார்கள்!! விரும்புவது ராஜதந்திரமுமாகாது, ஏனெனில், இந்துஸ்தானம் ஒரே வட்டாரமாக இருந்தால் அங்கு ஆரிய ஆட்சிதான் இருக்கும்! ஆட்சி இந்திய கண்டத்தில் (Balance of Power) சக்திப்போட்டி சரியானஅமைப் புடன் இராது. இதற்காகவேண்டி, பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், ஈராக், ஈரான், சிரியா, அரபு, துருக்கி ஆகிய வட்டாரத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு, **ஆசியா கண்டத்து இஸ்லாமிய கூட்டாட்சி அமைத்துக் கொள்ளவேண்டும்** (All Asiatic-Muslim Federation) என்ற முடிவுக்கு வரவேண்டி நேரிடும். அதன் பலன்கள் என்னவென்று எண்ணினாலும் ஆரியர் அஞ்சி அஞ்சிச் சாவர்!!

முஸ்லீம்கள் அங்ஙனம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் பிறக்குமா என்று கேட்டால், பாகிஸ்தான் இந்துஸ்தான் என்ற இரண்டே வட்டாரம் இந்தியாவில் அமைந்தால், நிச்சயம் அந்த நிலைமை உண்டாகியே தீரும். ஆரிய ஆட்சி வீரத்தை நம்பாது, சூட்சியில் நம்பிக்கை கொள்ளும்.

**மெஜாரடி ஸ்தானங்களை குறுகிய புத்தியுடைய லீகர்களுக்குக் கொடுப்பதைவிட பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டிலே இருப்பதே மேல்.**

**லீகர்களுக்கு தேசபக்தி கிடையாது.**

இந்தியாவைத் தாய் நாடென்று அவர்கள் சொல்வதில்லை.

இவை மே 15-ல் தினமணி எழுதியவை! இத்தகைய நினைப்புதான் ஆரிய ஆட்சியில் இருக்கும் எனவே பாகிஸ்தான்மட்டும் ஏற்பட்டு, இந்தியாவில் பெரும் பகுதி இந்து ஆட்சியில் இருந்தால், விரைவில் நாட்டிலே ரணகளம் ஏற்படும். ஆனால் மூன்று வட்டாரமாக, பாகிஸ்தான், ஆரியஸ்தான், திராவிடஸ்தான் என்று பிரிந்தால், Balance of power சக்திகளின் சமத்துவம் ஏற்படும், சமர் எழக் காரணமேற்படாது. பாகிஸ்தான் ஏற்பட்டு, இந்தியாவின் மற்றப்பகுதி ஆரிய ஆட்சியில் இருந்தால், அங்குள்ள முஸ்லீம்கள் நிம்மதியாக வாழமுடியாது! அவர்கள் கொடுமைப் படுத்தப்படுவார்கள். ஏனெனில், பாகிஸ்தானைவிட இந்துஸ்தான் பெரிது என்ற மமதையும் இந்துமதத் திமிரும் ஆரிய ஆட்சியாளரிடம் இருக்கும். திராவிட நாடு தனிநாடானால் அங்கு முஸ்லீம்கள் சரிசமமாக வாழமுடியும்! ஏனெனில் அவர்கள் திராவிட இனம்; தோழர்கள். இதனை ஜனாப் ஜின்னா மறக்கவில்லை! எனவே பாகிஸ்தான் பண்புடன் விளங்க, திராவிடஸ்தான் ஏற்பட்டே தீரவேண்டும். இதனை ஜனாப் ஜின்னா அறியாமலில்லை! ஆச்சாரியார் இதை இன்றே உணருதல் நன்று! !

பாகிஸ்தான் பிறந்துவிட்டால், ஆரியவேட்டைக்காரர்களுக்கு அங்கு இடமிருக்காது ஆகவே வடநாட்டு முதலாளிகளின் படை திராவிடநாட்டில் பெருவாரியாகப்புகுந்து, வியாபாரத்துறையில் மேலும் ஆதிக்கம் செலுத்தும். மார்க்கட் சுருங்கிவிட்டால், திராவிடநாட்டைப் பூராவும்பண்ணையாக்கி,வடநாட்டார் வியாபார மிராசுதாரர்களாகத்தானே வாழப்பிரியப்படுவார்கள். அதனைச்சகிக்கவோ, தாங்கவோ திராவிடரால் முடியாது. எனவே பாகிஸ்தான் பிரிந்து திராவிடஸ்தான் ஏற்படாது போனால், திராவிடர் தத்தளிக்கவேண்டும். எனவே அவர்கள் திராவிடநாடு பெற, உயிரைப்பணயமாகவைத்து உக்கிரவிளையாட்டு நடத்தியே தீருவர்.

இவைகளை முன்கூட்டியே ஆச்சாரியார் உணருவது நல்லது. "**பதவியில் அமரேன் நான் அவ்வளவு முட்டாளுமல்ல, கெட்டவனுமன்று**" என்று கோகலே மண்டபக்கூட்டத்தில் ஆச்சாரியார் கூறியுள்ளார்.

பதவியில் அவர் அமரட்டும், அமராமற் போகட்டும் நமக்குக் கவலையில்லை. ஆனால் பாகிஸ்தானுக்கு இணங்கி திராவிடநாட்டுக்கு மறுப்பளிதன்றால், "அவர் அவ்வளவு அறிவாளியுமல்ல, நல்லவருமல்ல" என்று திராவிடநாடு தீர்ப்பளிக்கும் என்பது நிச்சயம்.


**திருச்சி ரேடியோவில்**

மாஸ்டர். T. V. நமசிவாயம் பாடுகிறார்.

20—5—42ல் மாலை 6-45 மணி முதல் 7-15 வரை.

" 8-45 , 9-20. "

**எல்லாம் தமிழ்ப் பாட்டே.**

# திருக்கழுக்குன்றத்தில் ஜஸ்டிஸ் மாநாடு

13—5—42ந் தேதி புதனன்றே ஜில்லாவின் பல பாகங்களினின்றும் புதுவை, வேலூர், திருப்பத்தூர், திருவத்திபுரம் முதலிய வேறுஜில்லாவில் இருந்தும் பிரதிநிதிகள் வந்துவிட்டார்கள். 14—5—42உ காலை தோழர் எல்லப்பமுதலியார் மாளிகையில் இருந்து தலைவர்களின் ஊர்வலம் புரப்பட்டு மாநாடு பந்தல் வரை வந்து முடிந்தது. சரியாக 8-மணிக்கு மாநாடு ஆரப்பமாயிற்று. மூவாயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டு பந்தலில் குழுமி இருந்தார்கள். ஐந்நூறுக்கு மேற்பட்ட தாய்மார்கள் பந்தலில் நிரம்பி இருந்தார்கள்.

கயப்பாக்கம் ஜமீன்தார் முத்துலிங்க ரெட்டியார் ஜஸ்டிஸ்கொடி யேற்றுவித்தார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்து நீண்டபிரசங்கம் செய்தார். திருவற்றியூர் ஷண்முகம்பிள்ளை அவர்கள் நமது வரவேற்பு உரையை வாசித்தார். மாநாட்டிற்கு திருவாளர் சோமசுந்திர பாரதியார் அவர்களை தலைமை வகிக்கவேண்டுமென்று திருச்சி வக்கீல் வேதாசலம் B. A. B. L., அவர்களும் டாக்டர், கிருஷ்ணசாமி, பெரியார் ராமசாமி, பட்டுகோட்டை K. V. அழகிரிசாமி முதலிய தலைவர்கள், பாரதியார் இந்தி எதிர்ப்புக்காலத்தில் நம்மிடையே கலந்து வேலைசெய்ததையும், அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் எடுத்து மக்களுக்குச்சொல்லி தலைமை வகிக்கபிரேரித்துப்பேசினார்கள். நீண்ட கைதட்டலுக்கிடையே பாரதியார் அவர்கள் தலைமை வகித்து சுமார் 2-மணி நேரம் வீரஉரை நிகழ்த்தினார். (தலைவர் சொற்பொழிவு அடுத்தவாரம் வெளிவரும்.)

பகல் 1-மணிக்கு மாநாடு கலைந்து மீண்டும் 3-மணிக்கு ஆரம்பமாயிற்று. டாக்டர் கிருஷ்ணசாமி, நாயர் படத்தை திறந்துவைத்து நாயரின் லட்சியங்களைப்பற்றியும் இன்றய திராவிடநாட்டுப் பிரிவினையை ஆதரித்தும், பிரிவினையின் அவசியத்தைப்பற்றியும், எடுத்துச்சொன்னார். பிறகு காஞ்சிபுரம் A. K. தங்கவேலர் தியாகராயர் படத்தை திறந்துவைத்து அவர் கைத்தறியாளர்களுக்கு செய்த நன்மைகளைச்சொல்லி இனி நமதுகட்சி கைத்தறிநெசவாளருக்கு செய்யவேண்டிய வேலைதிட்டத்தையும் அதிக விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துச்சொன்னார்.

பிறகு காஞ்சிபுரம் பார்ப்பனரல்லாத இளைஞர் கழகத்தலைவர் T. P. S. பொன்னப்பா அவர்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் படத்தைத் திறந்து வைத்து பெரியார் அவர்களின் வாழ்க்கை ஆரம்பத்திலிருந்து இன்றயவாழ்க்கைவரை எடுத்துரைத்து அவர் தமிழ்நாட்டு லெனின் என்பதைஎடுத்துக்காட்டி வீர உரை நிகழ்த்திப் படத்தைத் திறந்துவைத்தார்.

மாநாட்டின் தீர்மாணங்களை ஆதரித்து காஞ்சீபுரம் A. K. தங்கவேலர் மாஜி மந்திரி S. முத்தைய முதலியார், பெரியார் ஈ. வெ. ரா. K. V. அழகிரிசாமி, காஞ்சீபுரம் C. V. ராஜகோபால், C. P. சின்னராஜு, C. N. அண்ணாதுரை M. A., மற்றும்பல தோழர்கள் பேசினார்கள்.

தலைவர் முடி உரையுடன் மாநாடு இரவு 9 மணிக்கு முடிந்தது. தோழர் மாயவரம் S. V. லிங்கம் வந்தனோபசாரம் கூறினார்.

மாநாடு வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்கு திருக்கழுக்குன்றம் திரு. சீதா அவர்களின் உழைப்பு மிகவும்பாராட்டத்தக்கது.

தோழர் பாலும் அவருடைய சகாக்களும் நண்பர்களும் மாநாட்டின்போது செய்த தொண்டு பாராட்டக்கூடியது. மாநாட்டில் திருவத்திபுரம் தோழர் சுப்ரமண்யம், பழனிச்சாமி, புதுவை. ராமலிங்கம், யிடையிடையே பாட்டுகள் பாடி பிரதி நிதிகளை மகிழ்வித்தார்கள்.

---

**ஷண்முகம் பேருரை.** 5ம் பக்கத் தொடர்ச்சி.

பணியாற்ற வேண்டியபொறுப்பு நம்முடையது. நமது நாட்டை நாமடைய உரிமை உண்டு. அதைத்தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. தமிழர்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களைத் தலைவராகப் பெற்றுள்ள இந்தச்சமயத்தில் சமஉரிமை, சமத்துவம் ஆகியவற்றுக்காகப் போரிட்டு வெற்றி காணவேண்டுமென்று விழைகிறேன். தள்ளாதபருவத்திலும் தளராத ஊக்கத்துடன் உழைத்துவரும் பெரியார் அவர்கள், லெனின் போன்ற, வீரம்படைத்தவர். போருக்கு அஞ்சாதவர். கஷ்ட நஷ்டத்துக்குக் கலங்காதவர். வாலிபர் உள்ளங்களைக் கொண்டவர். அவராணைப்படி நடப்போம், திராவிடநாட்டைப் பெறுவோம்.

நமது மாநாட்டுத்தலைவர் முத்தமிழ்விற்பன்னர், ஆங்கிலப்படிப்பும் குறைவறப்பெற்றவர், அருங்குண அண்ணல். அவருடைய ஆராய்ச்சி மிக்க அறஉரைகள் கேட்டு, தமிழர் தம்மை உணர்ந்து, தலை நிமிர்ந்துநின்று, போரிடச்சித்தமாக உள்ளனர். பேரறிஞர் பாரதியார் அவர்கள் நீதிக்கட்சியின் நடுநாயகமாக விளங்கி, நம்மைத்தலைமை தாங்கி நடத்திச்செல்ல வேண்டுகிறேன்.

செல்வமும் செல்வாக்கும், திறமும் தீரமும், அறிவும் ஆற்றலும் பெற்ற பல தளபதிகள் இங்கு வீற்றுள்ளனர். அவர்கள் முன்னிலும் பன்மடங்கு உழைத்து, வீறு கொண்டெழுந்துள்ள தமிழர் படையை நடத்திச்சென்று, ஆரியத்தை அழித்து, திராவிடநாட்டைத் தனிநாடாக அமைக்கும் அறப்போரை நடத்துவர் என்பது உறுதி. முகிலைக்கிழித்து வெளிகிளம்பும் முழுமதிபோல், ஆரியத்தை வென்று தமிழர் தமது தரணியை ஆள்வோராக வெளிவருவர் என்பது திண்ணம்.

செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டைக் கூட்ட எனக்கு ஆர்வம் உண்டாகச்செய்த எனது நண்பர்கள் தோழர்கள் ராவ்சாகிப் வேதாச்சல முதலியார், கயப்பாக்கம் முத்துலிங்கா ரெட்டியார், காஞ்சீபுறம் A. K. தங்கவேலர், கழுக்குன்றம் எல்லப்பமுதலியார், ஆகியோருக்கு எனது நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருக்கழுக்குன்றத்தில் கூடிடும் இந்த மாநாட்டின் இலட்சியம் நிறைவேற, நாம் நமது கட்சியின் வளர்ச்சியைக் காணவேண்டும். அதற்காவன செய்யவேண்டும்.

மிகக் குறுகியகாலத்திலே இம்மாநாடு கூட்டுவிக்கப்பட்டதால், பிரதிநிதிகளுக்கு வசதிகள் செவ்வனே செய்யமுடியாது போயிற்று. அதுகுறித்து நமது தோழர்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதை நானறிவேன். அவர்களின் அன்பும் ஆதரவும் பெற்றுள்ள நமதுகட்சி இனி வெற்றி பலகண்டு, வீரத் தமிழருக்குத் தனியாட்சி பெற்றுத்தரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழரின் பண்டைப் பெருமை, ஆரியம் ஆதிகாலமுதல் செய்துவந்த சூழ்ச்சி, காந்தியத்தின் போக்கு, ஆகியவைகளை நாட்டுக்கு நன்கு எடுத்துரைக்கும் மனவளமும் நாவன்மையும், தீரமும் பெற்ற, தோழர் சோமசுந்தர பாரதியார், இம்மாநாட்டுக்குத் தலைமைதாங்க வேண்டுமென்று உங்கள் சார்பாகப்பிரேரேபித்து, மாநாட்டுக்குவந்துள்ள உங்கள் அனைவரையும் மீண்டும் நல்வரவு கூறி வரவேற்கிறேன். வாழ்க பெரியார்! வாழ்க பாரதியார்! வாழ்க திராவிடநாடு.

ரோமாபுரி ராணிகள் 4 ம் பக்கத் தொடர்ச்சி.

பரவசப்படுத்தின. அந்த அழகுத்தேவதையை அனுதினம் பூஜித்து வரம்பெற்ருன் நுபஸ் கிரிஸ்பினஸ். பாப்பேயாவை மணஞ்செய்து கொண்டதும், அதிர்ஷ்டத்தையே அணைத்துக்கொண்டதாக அவன் கருதினுன். அவள் புன்னகை புரியவேண்டும், அதைக் கண்டுதான் மகிழவேண்டும். அவள் அலங்காரஞ் செய்துகொள்ளவேண்டும், அதைக்கண்டுதான் பூரிக்கவேண்டும். அவள் ஆனந்தமாக இருக்கவேண்டும், அதுகண்டுதான் அகமகிழவேண்டும். இதுவே அவன் நோக்கம். மலரின் ரம்மியம் கசக்கினுல் கெட்டுவிடும், கனியின் கவர்ச்சி கல்லடிபட்டால் கெடும், அதுபோல் தனது காதற்கிழத்தியின் மனங்கோணினுல், முகங் கோணும், முறுவல் மறையும், அழகுகெடும், ஆகவே, அதுநேரிடாதபடி சர்வஜாகரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும், இது கிரிஸ்பினசின் இலட்சியம். அவளிடம் அவனுக்கு அவ்வளவு பிரேமை! அவளுடைய சுகவாழ்வுக்காகவே, தான் உழைக்கவேண்டும் என்று உறுதிகொண்டிருந்தான். அவளுடைய சந்தோஷத்துக்காக சதாகாலமும், விருந்தும் இசையும், நடத்திவந்தான். ரோம்நாட்டு ரசிகர்கள் ஆங்குகூடுவர்! இசைகேட்க அல்ல! விருந்துண்ணவுமல்ல! வேல்விழியாளைக் காண! பேச! அவளுடைய நேத்திரத்தின் சுழல், அவர்களின் மனதைச் சுழலவைத்தது. அவளுடைய சிரிப்பு, அவர்களை ஆனந்த ஆழியிற் தள்ளிற்று. அவள் ஸ்பரிசமோ.........! விருந்துக்கு வருபவர் எல்லாம், பாப்பேயாவைப் புகழ்ந்து, அவள் 'அருள்' பெறவே எண்ணினர். சொகுசான வாழ்க்கை தனக்கே கேடாகவரும் என்பதையோ, விருந்துண்ணும் நேசர்கள் பாப்பேயாவைச் சூறையாடிச் செல்வர் என்பதையோ துளியும் யோசியாமல், கேளிக்கை அவளுக்குப்பிரியம், ஆகவே அது தேவை என்று மட்டுமே தீர்மானித்தான் கிரிஸ்பினஸ்.

பாப்பேயாவைச் சூழ்ந்திருந்த சொகுசுக்காரர்களில் ஆத்தோ என்ற ஆணழகன் மிக்க சாலக்கான பேர்வழி! கடலின் ஆழத்தையுங் கண்டறியலாம், கன்னியர் உள்ளத்தைக் கண்டறிவது கடினம் என்பர் ஆன்ருேர்! ஆனுல் ஆத்தோ, அதை நம்புவதில்லை. மாதரைச் சுலபத்திலே மயக்கமுடியும் என்றநம்பிக்கை கொண்டவன்—அனுபோகம் உள்ளவன். எனவே அவன், எந்நேரமும், பாப்பேயாவின் அழகைவர்ணிப்பான், அலங்காரத்தைப் போற்றுவான், "உனது மதுரமொழி என்னைச் சிறைப்படுத்திவிட்டது, மாதரசி, உன்னருகே இருக்கும்வரை நான் இன்பபுரியிலன்ருே வசிக்கிறேன். தென்றல் வீசும் இடத்தில், இளநீர் பருகி இன்புற்றிருப்பவன், வெப்பமிகுந்த இடஞ்சென்று வேம்புபழுத்துத் தொங்கக்கண்டுமனம் வெதும்புவதுபோல், இங்கிருந்து நான் வேறெங்கு சென்ருலும், இருக்கிறதே என்னென்பேன். கிரிஸ்பினசைப்போன்ற அதிர்ஷ்டசாலி உலகிலே வேறுயாரிருக்கமுடியும்? உன்னைப்போன்ற உல்லாசியை நாயகியாகக் கொண்டவனுக்கு ஈடுஎதிர் உலகிலேது? "என்றெல்லாம் கூறுவான். "இந்த முத்துமாலை உனது மார்பில் புரண்டு பெருமை பெறட்டும், மறுக்காதே மாதர் மணியே" பெற்றுக்கொள் என்றுகூறி, மாலையைப் பரிசளிப்பான். "இந்த மதுரமான கனிகள் மிக்க சுவையுள்ளன. மெசபடோமியாவிலிருந்து தருவித்தேன். இவைகளைப்பெற்றுக்கொள், உன்மொழிக்கு ஈடான சுவையை இக்கனிரசம் எனக்குத் தரவில்லை" என்று கூறுவான்! புகழ்வது, பரிசுகள் தருவது, அடிக்கடி சந்திப்பது அளவளாவது, ஆகிய இவைகள் மூலம், ஆத்தோ, பாப்பேயாவின் மனதைமெல்ல மெல்லக் கவர்ந்தான். எல்லோரும் விருந்துக்கு வந்திருந்தாலும், ஆத்தோ வரவில்லையானுல், பாப்பேயாவின் முகம் மலராது! மாளிகையிலே எப்பக்கம் நோக்கினுலும், ஆத்தோ அன்போடு தந்த ஏதாவதொரு பரிசு அவள் கண்ணில்படும்! பொருள் இருக்கும் இடத்திலே, அவனே நின்று புன்னகைபுரிவதுபோல் அவளுக்குத்தோன்றும். "ஆஹா! அவனுக்குத்தான் என்னிடம் எவ்வளவு அன்பு!! என்னை மனைவியாக்கிக் கொண்டவனுக்கு இந்தஅக்கரை இல்லையே!"—என்று பாப்பேயா எண்ணிக்கொள்வாள்.

அவனுடைய புகழுரையைக் கேட்டுப் பூரித்தபடி முகத்தை அவன் முகத்தருகே நிறுத்தி, "அன்புடையீர் ஆத்தோ! இவ்வளவு பிரியம் வைத்து, இவ்வளவு செய்கிறீரே என்பொருட்டு. என்னுல் உமக்கு ஏதொரு இலாபமும் இல்லையே என்றெண்ணியே ஏங்குகிறேன்' என்று பாப்பேயா கூறுவாள்!

"மனோஹரி! உன்னைக் காணவும், பேசவும், தோழமை கொள்ளவும் இடமிருக்கிற இந்த இன்பத்துக்கு நான் தந்த பரிசுகளும், என்நேசமும் ஏணிவைத்தாலும் எட்டாதே! வீரமிக்கவனை உலகம் போற்றவில்லையா! அவன் நேரடியாக என்ன தருகிறுன்! கவியைப் போற்றுகிருேம், கவிதையின் சுவையைப்பருகி. அதுபோல், ரோம சாம்ராஜ்யத்துக்கே வைரமாக இருக்கும் உன்னைப்புகழ்வது எனக்கன்ருே இன்பம். இந்த பேறு எனக்குக் கிடைக்கச்செய்தது ஒன்றுபோதாதா? எளியேனின்மனம் ஏதேதோ எண்ணுகிறது, என் செய்வது!" என்று தந்திரமாக ஆத்தோ பேசுவான்.

"என் உள்ளம் மட்டும் சும்மாவா இருக்கிறது. நான் தங்கக்கூட்டில் அடைபட்ட கிளிபோல் இருக்கிறேன். என் நிலையை நீ அறியாயா ஆத்தோ" என்பாள் பாப்பேயா.

"செவி குளிர்ந்தது சிங்காரி! நெஞ்சில் நானிருந்தால் போதும், நிலைமைமாற நெடுநாட்கள் பிடிக்காது" என்று முன்னேறுவான் மாதரை வசிகரிக்கும் வித்தையிற் தேர்ந்தவன்.

" நூபஸ் என்னை இழக்க ஒருநாளும் இசையான். ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், என்னையும் சித்திரவதை செய்வான், தானும் தற்கொலை செய்து கொள்வான். அவ்வளவு பாசம் வைத்திருக்கிறுன் நூபஸ். தர்ம சங்கடமாகத்தானே இருக்கிறது" என்று பாப்பேயா கூறுவாள்.

கோட்டைக்கு வெளியே உள்ள அகழியைக் கடந்துவிட்டோம், இனிமதிற் சுவற்றைத்தாண்டி உள்ளே புக வேண்டியதுதான் பாக்கி, என்று தீர்மானிக்கும் தளபதிபோல், பாப்பேயாவின் உள்ளத்தை உருக்கி விட்டோம், இனி, வேளையை வருவித்துக் கொள்வது தான் பாக்கி என்று ஆத்தோ தீர்மானித்துப் பூரித்தான்!

இத்தகைய சரசமாடுவது சில நாட்கள் நடைபெற்ற பிறகு, பாப்பேயா, ஆத்தோவைக் கலியாணஞ் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டாள். தித்திப்பான தீர்மானம் பிறந்ததும், நூபஸ் வேம்பானுன். பாப்பேயாவின் தீர்மானம், விரைவிலே செயலாகி விட்டது. ஆத்தோவை அவள் மணஞ் செய்து கொண்டாள்.

இதற்குள், பாப்பேயாவின் புகழ், அரசமன்றத்துக்குச் சென்றது. அங்கு ஆக்டேவிடம் ஆடிப்பாடிக் கிடந்த நீரோவின் செவிகளில், பாப்பேயாவின் சிங்காரச்சிறப்பு புகுந்தது "அப்படியா! அவ்வளவு அழகா?" என்று வியப்புடன் கேட்பான் மன்னன்! பாப்பேயாவின் அழகு, அரசனின் செவிபுகுந்ததற்குக் காரணமே, ஆத்தோதான்!

"மன்னரே! அந்த மனோஹரியைக் காணுதகண்கள், வெறும் புண்கள்"

"போ! போ! புனைந்துரை பேசுகிருய். அவள் என்ன அவ்வளவு அழகியா? ஆக்டேவிடம் அவள் என்ன செய்யமுடியும்?"

"அரசரே! பாப்பேயாவைக்கண்டு பிறகு பேசும்!"

"தோழனே! நீ ஏதோ பிரமாதமாகப்பேசுகிறாய்' உனது ஆசை உன் கண்களை மறைக்கிறது"

"நீரோ மன்னரே, உமது நேத்திரம் பெற வேண்டிய விருந்தை இன்னமும் பெறவில்லை"

"சரி! அந்த பாப்பேயாவை நான் ஒரு முறை பார்க்கிறேன்"

இவ்விதமாக மன்னனும், ஆத்தோவும் பேசுவர். அரசன் அதிசயப்பட்டான்! தர்ப்பாரிலே எவ்வளவோ சுந்தரிகள் வருகிறார்கள், போகிறார்கள். கிதமொழிக் கிளிகளும், அ ன் ன நடை அணங்குகளும், மின்னல் இடை மினுக்கிகளும், கொஞ்சுகின்றனர். இவ்வளவு பேரையும், மூலையில் தள்ளிவிட்டு, பாப்பேயாவைப் புகழ்கிறானே! என்று அரசன் வியந்தான்.

கடைசியில் ஓர்நாள், மன்னன், மயிலாளைச்சந்தித்தான்! கண்டதும் காதல்கொண்டான்! அவனுடைய விழியில் தாவிக்குதித்து, நெஞ்சிலே நின்றுகொண்டு பாப்பேயா நர்த்தனம் புரிந்தாள். ஆக்டேவை மறந்தான்! அழகு சுந்தரிகளை வெறுத்தான்! மலரிருக்க புதரில் நடந்தோமே, மணியிருக்க பருக்கைக்கற்களைத் தேடினோமே, ஒளிஇருக்க இருளில் புரண்டோமே, நீரிருக்கச் சேற்றில் நடந்தோமே, பாப்பேயா இதே ரோம் நகரில் இருக்க, ஏதேதோ பெண் உருவங்களுடன் வீண்காலம் போக்கினோமே, என்று மன்னன் எண்ணி ஏங்கினான். மன்னனின் மனதை அவள் தெரிந்துகொண்டாள்! மனம் மகிழ்ந்தது! "மனமே பொறு! மாளிகையிலிருந்து அரண்மனை! சீமானைவிட்டுப் பிரிந்து மன்னனைச்சேரப்போகிறாய்! பதறிடாதே, அவசரப்படாதே!" என்றுமனதைத்தேற்றிக்கொண்டு, அச்சமும் நாணமும் அழகுற விளங்க நடித்தாள். மன்னனைக்கண்டால் தலைகுனிவாள்! பேசும்போது, குரல் கம்மிக்கொண்டிருக்கும்! பார்க்கும்போது, பிரேமையும் பயமும் கலந்திருக்கும்! இஷ்டந்தான்! இயலுமா?—சம்மதந்தான், ஆனால் சரியாகுமா?—என்று அவளது கண்கள், மன்னனைக்கேட்கும்! என்விருப்பத்தைத் தடைசெய்யும் சக்தியும் சாம்ராஜ்யத்திலே இருக்கிறதோ என்று கேட்பான் மன்னன்.

காதல் நிராகரிக்கப்பட்டால், சோகமும் துக்கமும் பிறக்கும். காதல் கைகூட, அவளாலும் தடையில்லை. ஆனால் இடையேயுள்ள சில சங்கடங்களால், காதல் கைகூடப்போவதில்லை என்பது தெரிந்தால், வேதனைதோன்றும், காதல் கைகூடுமென்று கருதித் தூதுவிட்டோ, உரையாடியோ, உதாசினம் செய்யப்பட்டால், வெட்கந்தோன்றும். எனக்கும்சம்மதந்தான், ஆனால், இதுமுறையாகுமா? வெளியே தெரிந்தால் என்ன எண்ணுவார்கள்? மகாசந்தேகப்பேர்வழிகளால் சூழப்பட்டிருக்கிறேனே, நான் இதற்கெப்படி இணங்குவது! என்நிலை தெரிந்தும், அவர் இதுபோல் கேட்கலாமோ, என்று கூறக்கேட்டால், ஏமாந்தால் வெட்கம், கிடைக்கவில்லையே என்பதனால் சோகம், குறுக்கே தடைகள் உள்ளனவாமே என்பதை எண்ணுவதால் வேதனை, இதற்காக எடுத்த முயற்சி வீணாயிற்றே என்பதை எண்ணுவதால், கோபம், ஆக இவ்வளவும் உண்டாகுமன்றோ! மன்னன் நீரோவுக்கும் இதே நிலை!! கோபமும் சோகமும், துக்கமும் வேதனையும், அவனைக்குடையலாயின! இவ்வளவுடன் இன்னொன்றும் சேர்ந்தது மன்னனுக்கு. அவன் உள்ளத்திலே எந்த அளவுக்குக்காதற்தீயை மூட்டமுடியுமோ அவ்வளவும் மூட்டிவிடவேண்டும் என்று தீர்மானித்த பாப்பேயா, "மன்னரே! தங்கள் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துதரும் நிலையிலே நான் இல்லை. நெஞ்சம் சுடுகிறது! தாங்கள் மனவருத்தப்படாதீர். இளமங்கை ஆக்டேவியா உமக்கு ஆனந்தமளிப்பாள்! அடிமை ஆக்டே உம்மை ஆருயிர் எனமதிப்பாள். அவர்களிடைகுலவி, என்னைமறவுங்கள்" என்று கூறினாள். மன்னனால், இச்சொல்லம்பைத்தாங்க முடியவில்லை. தாளமில்லாதபாட்டு, தடாகமில்லாத ஊர், தயவில்லாத தையல், யாருக்குப்பிடிக்கும்! சாதாரண ஆசாமிகள் இந்நிலையில், "நாமென்ன செய்யமுடியும்! பாறைபோல், மனதைப்பண்படுத்தி வைத்துவிட்டால், நாம் மோதிச்சிதறுவதுதவிற வேறென்ன செய்வது?" என்று மனவேதனைப்படுவர். மன்னன் அங்ஙனமிருப்பானா! வெகுண்டான். பிடி! சாபம், என்றான், ஆத்தோவை நோக்கி, "நாளைமுதல் நீர், லூஸ்டானியா மண்டலத்துக்குக் கவர்னர்! இது நமது கட்டளை! இன்றே நீர்புறப்படும்" என்ற உறத்தகுரலில் மன்னன், ஆத்தோ விடங்கூறிவிட்டு, மெல்லிய குரலிற், "பாப்பேயா ரோம்நகரிலேயே இருக்கட்டும், இதுவும் நமது கட்டளை!" என்று கூறினான். ஆத்தோ துடித்தான், துயருற்றான், பெருமூச்செறிந்தான், பொன் விலங்கு பூட்டிவிட்டான் நீரோ, பொற்கொடியைச் சூறையாடினான், என்னசெய்வது, என்று ஏங்கி, லூஸ்டியானா போய்ச்சேர்ந்தான்! பாப்பேயா, மன்னனின் பஞ்சணை புகுந்தாள்! மன்னன் களிப்புக்கடலிற் குளித்தான். பலநாட்கள், பாப்பேயா, மன்னனின் "பிரதமபியாரி!" யாகவே இருந்தாள். மன்னனின் மனைவியாக ஆக்டேவியா இருந்தாள். பிறகு, அந்தத் தடையும் நீங்கிற்று. விவாகவிடுதலை, சிறைவாசம், மரணதண்டனை என்று மாசற்ற ஆக்டேவியாவுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது, மூர்க்கத்தனமான மன்னனுடைய கட்டளையால். நீரோவின் அன்னை அக்ரிபாவும் அழிக்கப்பட்டாள். பாப்பேயா, பட்டமகிஷியானாள். அவளுக்கு எதிர்ப்பேஇல்லை. மன்னன், அவள் மடிமீது கண்டசுகம் மேதினியில் வேறெங்குமில்லை என்றுதான் இருந்தான். பாப்பேயா, பட்டத்தரசனின் சார்பில் கட்டளைகள் பிறப்பித்துக்கொண்டு வாழ்ந்துவந்தாள். காமச்சேட்டைகளுடன் மன்னன் நீரோவுக்கு, தேரோட்டுதல், தெருவில் நின்றுபாடுதல், கூத்தாடுதல், ஆகியவற்றிலே விருப்பம். மன்னன் இவை செய்தால், மகாராணிக்குப் பிடிக்கவில்லை. பன்முறை கூறியும் அவன் கேட்கவில்லை. இதனால் விளைந்த சிறுசச்சரவின்போது, நீரோ, பாப்பேயாவை வயற்றிலே உதைக்க, அவள் திடீரென மாண்டாள். கொதித்தகோபம், பரிமளவல்லியைப் பிணமாக்கியது கண்ட மன்னனின் மனம் கொப்பளித்தது. தன் செயலை எண்ணிப்புலம்பினான். அவளைத் தன்கண்ணீரால் கழுவினான்! ஆருயிரே! அன்பே! அனியாயமாக உன்னைக்கொன்றேனே! என்றழுதான். பிணமாகிக்கிடந்தவள் பேசவாபோகிறாள்! ரோம்ராஜ்யத்தைச் சிறைப்பிடித்த சிங்காரவல்லியும் சவக்குழியில் சேர்க்கப்பட்டாள்.

## வாழ்க்கை ஒப்பந்தம்.

8—6—42 சிதம்பரத்திற்கடுத்த வெள்ளியங்குடி! கிராமத்தில் தோழர் ஆறுமுகம் அவர்கள் புதல்வர் முருகேசன் அவர்களுக்கும் தோழர் வெய்யலூர் மாணிக்கம் அவர்கள் புதல்வி சிவகாமி அவர்களுக்கும், வெள்ளியங்குடி கிராமம் மணமகன் இல்லத்தில் தோழர். C. N அண்ணாதுரை M. A. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். அது சமயம் தோழர்கள் S V. லிங்கம் வேலூர் C P. சின்னராசு ராமையா மற்றும் பல தோழர்கள் சீர்திருத்தத்திருமணம் என்பதைப்பற்றிப் பேசுவார்கள். அன்பர்கள் அனைவரும் வர வேண்டுகின்றோம்.

## குமாரபுரம் தமிழர் கூட்டம்.

மே மாதம் 9 தேதி விருதுநகரைச்சார்ந்த குமாரபுரம் திராவிடத் தொண்டர் இலக்கியக்கழகத்தைத் தோழர் P. S. சோமதி நாயகம் திறந்து வைத்தார். அவரும் தோழர்கள் ராஜமாணிக்கம், K செட்டியார். A. ராமச்சந்திரன், M. S. ஜெயராமன், K. சோமசுந்தரம். தோழியர் கமலம் ஆகியோர், நீதிக் கட்சியைத் தமிழர்கள் ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். தோழர் K. M. சக்கரபாணி வந்தனங்கூற, கூட்டம் இனிது முடிந்தது.

செங்கற்பட்டு ஜில்லா ஜஸ்டிஸ் மாநாடு.

## கயப்பாக்கம் குறுநில மன்னர்

# தோழர், முத்துலிங்கர்

## கொடியேற்று விழா சொற்பொழிவு.

தோழர்களே,

செங்கற்பட்டு ஜில்லா ஜஸ்டீஸ் மாநாட்டில் கொடி ஏற்றுவிழா ஆற்றும் அறிய பணியை எனக்கு அளித்தமைக்கு எனது நன்றி யறிதலை தெரிவித்துக்கொள்கிறேன். நமது கட்சியின் வளர்ச்சியில் நான் மிக்க அக்கரைகொண்டவன் என்ற போதிலும் பல்வேறு காரணங்களால் இத்தகைய பணியாற்ற நான்வந்ததில்லை. அத்தகைய என்னை உற்சாகமூட்டி கட்சி பணியாற்றுமாறு உணர்ச்சியூட்ட இந்த சந்தர்ப்பத்தை மாநாட்டினர் எனக்கு அளித்தனர் என்று கருதுகிறேன்.

நெருக்கடியான இந்தக் காலத்தைப்பற்றியும் தற்காலஅரசியல் நிலையைப் பற்றியும் பேரறிஞர், பாரதியார் அவர்களும் பெரியார் அவர்களும் நமக்கு எடுத்துரைப்பார்கள். நான் அதுகுறித்து அதிகம் ஏதும் சொல்ல எண்ணவில்லை. உலகமெங்கும் யுத்தம் பரவி உள்ள இந்நாளில் அந்தந்த நாட்டினர் தம்தம் பாதுகாப்பு பற்றியும் பல்வேறு இனத்தவர்கள் தங்கள் எதிர்காலம் பற்றியும் போர்முனையில்நின்று விவாதித்துக் கொண்டிருக்கக் காண்கிறோம். திராவிட இன மக்களாகிய நாம் நமக்கு பலகாலமாக இருந்துவரும் சமூதாயஇழிவு அரசியல் அடிமைத்தனம் ஆத்மார்த்த அஞ்ஞானம், பொருளாதாரமுடக்கம், ஆகியவைகளைப் பற்றிக் கலந்துபேசி திராவிடநாடு விடுதலையைக் குறித்துதிட்டம் வகுக்கக்கூடியுள்ளோம்.

நமது கட்சியின் கொடி நமது லட்சியங்களை மக்களுக்கு விளக்க ஏற்பட்டதாகும். சமுத்துவம், நீதி, என்ற இருபெரும் லட்சியங்களை இக்கொடி அறிஉறுத்துகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னால் முதல் முதல் பறக்கவிடப்பட்ட இந்தக்கொடி தென்னாட்டில் முதல் முதல் தோன்றிய புரட்சியின் சின்னமாக விளங்கிற்று. பிறப்பினால் உயர்வு தாழ்வு, குலத்தினால் பெறுமை, மதத்தினால் மமதை, சாஸ்திரங்களினால் செறுக்கு, புராணங்களினால் பேதமை, மூடப்பழக்க வழக்கங்களினால் முரட்டுத்தனம், ஆகிய இத்தனை அவலட்சணங்களையும் போக்கி சமஉரிமைப் போரைத் துவக்கிவைத்தது இந்தக்கொடி. வெள்ளையரும் கண்டு அஞ்சிய வீரமிக்க டாக்டர் நாயர் திராவிடரை தட்டி எழுப்பிய தியாகராயர், பாராளும் பக்குவம்பெற்ற பனகல் அரசர், தியாகத்திருவிளக்கு டாக்டர் நடேச முதலியார் ஆகிய பல தலைவர்கள் கரத்தில் பண்புடன் விளங்கிய கொடி. 15 ஆண்டுகள் தமிழரின் ஆட்சியின்போது பெருமிதத்துடன் பறந்த கொடி. அத்தகைய கொடியைபார்ப்பனீயம் கிளப்பிவிட்ட தேசியச் சுழுவளி சாய்த்து கீழே தள்ள, அதுகண்டு முன்னணிப்படையும் பின்வாங்க, எதிரிகள் ஏளனம் செய்ய இருந்த நிலைமையில் சுயமரியாதை இயக்க கர்த்தா பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் கொடியை எடுத்து மீண்டும்பறக்கவிட்டு படைவரிசைகளை திருத்தியமைத்தார். தமிழர்களுக்குள் புத்துணர்ச்சியை உண்டாக்கினர். காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலங்களை கண்டித்தார். அவர் நடத்திய இந்தி எதிர்ப்புப் போர் பார்ப்பனரை பதைக்கவைத்து வெள்ளையரை வியக்கச்செய்து தமிழருக்கு தன் உணர்ச்சியை உண்டாக்கிற்று. மாளிகைகளில் மட்டுமே பறந்த கொடி இன்று மக்களின் கொடியாயிற்று. திராவிட இன எழுச்சியை விளக்கும் கொடி ஆகிவிட்டது. திராவிட நாட்டை தனி நாடாக்கும் போர்க்கொடி ஆகிவிட்டது. எனவே முன்னிலும் பன்மடங்குஅதிகமான உணர்ச்சியுடன் தமிழர்கள் உழைக்கவேண்டும் என்று நமது கொடி அன்போடு அழைக்கிறது.

உத்தமமான கொள்கைகளை உலகுக்கு உணர்த்திவைக்கும் இக்கொடி இனிநமது வெற்றிக்கொடி ஆக வேண்டும் என்று விழைகிறேன்.

பிரமாண்டமான இந்த முயற்சி வெற்றிபெற வேண்டுமானல் நமது கட்சியின் கோட்டைகள் கிராமந்தோறும் தோன்றவேண்டும். மக்கள் அனைவரும் பார்ப்பனீயக் கொடுமையை உணர்ந்து, எந்த விலை கொடுத்தாகிலும் அதை விலக்கவேண்டும் என்று தீர்மானித்து தோள்தட்டி கிளம்பும் ஆவேசத்தை உண்டாக்கக்கூடிய பிரசாரம் வலுப்படவேண்டும். இந்த காரியத்தைச் செய்ய நமது ஜில்லா தலைவர்களால் நிச்சயம் முடியும் என்று நான் உறுதிகூறி மீண்டும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு நீதி நிச்சயம் வெல்லும் என்ற நம்பிக்கையுடன் நமது கட்சியின் கொடியை ஏற்றிவைக்கிறேன்.

**வாழ்க திராவிட நாடு.**

---

### பழய ஞாபகம்

கேள்வி: டாக்டர் வரதருஜுலு நாயுடு இப்போது என்ன செய்கிறார்?

பதில்: பத்து நாட்களுக்கு முன்னே, விழுப்புறம் பக்கத்திலே, ஒரு குருகுலம் ஆரம்பிக்கப் பட்டதாம். அதை விளக்கிப்பேசினராம். பழய ஞாபகம் அவருக்கு இல்லாமல்போகும்.

### பொழுது விடிந்தால்!

கேள்வி: "நம்பிமோசம் போனேம்" என்றுஜனப் மொய்தீன் மரைக்காயர், ஆச்சாரியார் தீர்மானத்தைப் பற்றிப் பேசினராமே அது ஏன்?

பதில்: உண்மைதானே பாவம்! காங்கிரசிலே சேர்ந்துகொண்டு, இஸ்லாமியசமூகத்தின் எதிர்ப்பைப் பற்றி வாடியது, ஏதோ காங்கிரசிலே பசைஇருக்கிறதென்று கருதித்தானே. இப்போது எல்லாம் நாஸ்தியாகி விட்டதே, என்ன செய்வார் நம்பித்தான்மோசம் போய்விட்டார்.

கேள்வி: இனிமேலாவது திருந்தி, பிறைக்கொடியின் கீழ் வந்து நிற்பாரா?

பதில்: எப்படி நான் உறுதி கூறுவது! பொழுது விடிந்தால் போச்சு என்பார்களே அதுபோல், ஆச்சாரியார் மறுபடியும் காங்கிரஸ் போதையை ஊட்டிவிட்டால், மரைக்காயர் பல்டி அடித்தாலும் அடிக்கக் கூடும்!

### இருக்கிறார் சிநேகிதர்!

கேள்வி: தேசீய முன்னணி என்று வைசிராயும் பேசுகிறார், ஆச்சாரியாரும் பேசுகிறார், இது எதைக் காட்டுகிறது?

பதில்: வைசிராய் நிர்வாக சபை மெம்பர்களிலே ஆச்சாரியாருக்கு சிநேகிதர் இருப்பதைக் காட்டுகிறது. வைசிராய் இது போல்தான் பேசப்போகிறார் என்பதை ஆச்சாரியார் தெரிந்துகொண்டு பேச வேறு எப்படி முடியும்?

K. S. சொற்பொழிவு. 1ம் பக்கத் தொடர்ச்சி.

கிறது கலிங்கத்துப்பரணி. இந்தகைய தமிழகத்தில் இன்று வறுமையும் வாட்டமும் வேலையில்லா கொடுமையும் பிளவுபட்ட சமுதாயமும் பேதமை மிகுந்த மக்களும், ஆரிய நச்சரவால் தீண்டப்பட்ட தாசர்கூட்டம் வடநாட்டு முதலாளிகளுக்கு ஏவலராய்மூடதனத்தின் காவலராய் பார்ப்பனீயத்தின் பாதம் தாங்கிகளாக பரிதாப வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். எல்லையை இழந்தோம் தொல்லைபல கண்டோம். திராவிட திருநாட்டினை ஆரியச் சிறையில் ஆழத்தள்ளிவிட்டோம். அவதியுறுகிறோம். நமது கலை, நாகரீகம், பண்பு, வியாபாரம், தொழில் மார்க்கம், மானம் ஆகிய வற்றை யெல்லாம் இழந்து விட்டு நடைப்பிணங்களாக இருக்கிறோம். இழந்தஎல்லையை மீண்டும் கட்டுவோம். ஆரியத்தின் ஆதிக்கத்தை தரைமட்டமாகதட்டுவோம். பண்டை தமிழகத்தின் பெறுமையை மீண்டுப் புதுப்பிப்போம் என்று திராவிட வாலிபத் தோழர்கள் ஒவ்வொருவரும் சூளுரைத்து தலைநிமிர்த்தி கனல்கக்கும் விழியும் குறுதி கொதிக்கும் உடலும், குன்றாத ஊக்கமும் குறையாத உணர்ச்சியும், குனியாத உள்ளமும் பெற்று திராவிட விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டும். இன்று நமக்கு கிடைத்துள்ள படைத்தலைவரைப்போல் இனி என்றும் தமிழருக்கு கிடைத்தல் அரிது. நமதிடையே ஒருலெனின் இருக்கிறார், ஆனால் நாம் ஜார் கொடுமைக்கு ஆளாகி வருகிறோம். அவருடைய தலைமையின்கிழ் ஆரியத்தைநப்பொசுக்கும் புரட்சி நடத்தப்படவேண்டும். அப்போது தான் நமது லட்சியத்தை நாம்உருவாக்கிக்காணமுடியும். அதற்காகநாம் அனைவரும் உழைக்கவேண்டும்என்பதனை உணர்த்தவே இந்ததிராவிடநாட்டுப் படத்தை திறந்துவைக்கிறேன்.

## வேதாளம் முருக்க மரம் ஏறுகிறதா?

நாட்டைத்துண்டாடுவதை, நாட்டினர் பெருவாரியாக எதிர்ப்பதால், பிரிவினை உரிமையின்றி, மாகாணங்களுக்கு விசேஷமான அதிகாரம் அளித்து, மத்திய சர்க்காருக்கு கொஞ்சம் அதிகாரமேதந்து, மாகாண சுயாட்சி தருவதன்மூலம், முஸ்லீம் லீகைச் சரிபடுத்தலாம்.” என்று தோழர் ராஜகோபாலாச்சாரியார், மே 10ந் தேதி, பெஜவாடாவில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். மெயில் பத்திரிகையில் மே 11ந் தேதி 4ம் பக்கம், 4வது கலத்தில் இது வெளிவந்திருக்கிறது. இதன்படி பார்த்தால், ஆச்சாரியார், பாகிஸ்தான் தர வேண்டும் என்ற தம்முடைய தீர்மானத்தைத்தாமே கைவிட்டு விடுவாரென்று தோன்றுகிறது.

பாகிஸ்தான் தருவதாக ஒப்புக்குக்கூறி, முஸ்லீம்களை மயக்குவதே ஆச்சாரியாரின் நோக்கம் என்று எண்ண இடமேற்படுகிறது.


சென்னை வந்ததும் ஆச்சாரியார், பெஜவாடா அறிக்கையைக் கவனிக்கவேண்டாம் என்று மற்றோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இப்படி, மாறிமாறிப் பேசுவது ஏன்? இரண்டு கட்சியினரையும் ஏய்க்க இவர் இந்தத் தந்திர முறையைக் கையாள்கிறாரா? அல்லது வேதாளம் பழயபடி முருக்கமரம் ஏறிக்கொண்டதா? பாகிஸ்தான், முஸ்லீம்களின் உரிமை, அதைத்தந்து தீருவதே நியாயம் என்று ஆச்சாரியார், மனப்பூர்வமாகக் கருதினால், திராவிடர்களுக்குத் திராவிடநாடுபெற உரிமை உண்டு என்பதை எப்படி மறுக்கமுடியும்? ஏன், திராவிட நாட்டுப்பிரிவினை விஷயமாக மௌனம் சாதிக்கிறார்?


## பாஷா சாஹிப் என்கிற B. சையத் காசீம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம், பெரிய காஞ்சிபுரம்.

நீண்டகாலமாக நாணயமும் நம்பிக்கையும்பொது ஜன நன் மதிப்பும் பெற்றது. எமது கடையில் தற்காலத்திற்கேற்ற புதிய மாதிரி சவரப்பொன் ஆபரணங்களும் வேலைப்பாடு அமைந்த எல்லா தினுசு வெள்ளிச் சாமான்களும், பஜார் விலைக்கு கூடுமான வரை சகாயமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்.




சகோதர சகோதரிகளுக்கு, தேவையான எல்லா விதமான ஆபரணங்களையும் குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்ததொழிலாளரைக் கொண்டு தயாரித்துக்கொடுக்கப் படும்.

தயவு செய்து ஒருமுறை ஆர்டர் கொடுத்து உண்மையை உணரவும்.


Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N Annadurai, M. A. at 51 Nimanthakara Street, L Conjeeveram.